ദീപനിലയം

V2 No. 18 2 May 1929

൨

ത211, N28KH
N29·2·18
189053

...டினர், செல்வத்தைத் தேடுவதால் விளைகின்ற ...டுமைமிகு நிலையைக் காட்டினர். மாத்யூ ஆர்னல்ட் ...னும் இன்னொரு புலவர் தற்கால வாழ்க்கையை,

" O life unlike to ours ! (we)
Who fluctuate idly without term or scope,
Of whom each strives, nor knows for what
And each half lives a hundred different lives"

...ன்றும்,

" But fly our paths, our feverish contact fly !
For strong the infection of our mental strife
Which, though it gives no bliss, yet spoils
for rest"

...ன்றும், உரைத்திருப்பதை மறத்தலாகாது. எலிஸ ...த் பாரெட் பிரௌனிங் அம்மையாரும், பொருள் ...ர்த்தலென்ற பேரால் தொழிற்சாலைகள் அமைத்து ...த்துதல் என்னும் முன்னேற்றத்தில் அடங்கிய ...டுமையைக் "குழந்தைகளின் கூக்குரல்" என்ற ...வாரு நூலில், ஓதுவோர் கண்கள் கரைந்து நீருகுக் ...ம்படி உருக்கமாய்க் கூறி, இறுதியில்

" They look up with their pale and sunken faces,
And their look is dread to see,
For they mind you of their angels in high places,
With eyes turned on Deity.

"How long" they say, "How long, O cruel nation
Will you stand, to move the world, on a
child's heart—
Stifle down with a mailed heel its palpitation,
And tread onward to your thrown amid
the mart?

Our blood splashes upward, O gold—heaper,
And your purple shows your path !
But the child's soul in the silence curses deeper
Than the strong man in his wrath."

என்று, புலம்புகின்ற செய்யுளை ஒருமுறைக்குப் பன்முறை யோதினால் முன் டென்னிஸன் சொன்ன வகை எந்திரக்கல்லாயிறுகியவர் மனமும் சிறிது இளகுவதாகும்.

இவ்வகை வெளிப்படையாய்த் தங்களுடைய முன்னேற்றத் தருக்கொழிந்து தலைசாய்க்கும்படி டென்னிஸன், கார்லைல் அனைய மெய்த்திறங்கண்ட புலமையோர் செப்புவதாற்றானே, திருப்பட்ட கல்லார்களாய மேனாட்டோர்களிற் சிலர் அன்னவர்களைக் கடலுளே தள்ளி முழுக்கவேண்டுகின்றனர். யோவான் ஸ்நாநகனது தலையைக்கொய்து ஹெரூட் இதனையே செய்தான். "நின்திரு வேறு, தனிப்பெரும் பொருள் வேறு" என்றுரைத்த பாலனைக் கடலில் தள்ளிய ஹிரண்யன் தொழிலும் அன்னதே. கல்லார்க்கொரு திருவந்தெய்தியக்கால் நல்லாருரைகளை அவர்கள் கேளாததுமன்றி அவர்களைத் தம் பகைவரெனவும் பாராட்டுவார். செல்வம் உடையவர்கள்போல் இவர் தோன்றலால், இன்னவர் வாய்நின்று வரும் மொழிகளெல்லாம் கொள்ளத்தக்கனவென்று பேதை ஜனங்கள் நினைத்துக் கடலில் முழுக்கென்றால் அவர், இவர் தீயில் கொளுத்தெனப் பேசலாகின்றனர். திரு வேறு தெள்ளியராதல் வேறு.

இன்னபடி நிரம்பிய நூலுடைய மேனாட்டு அறிஞர்களே தம்முடைய "முன்னேற்றத்தின்" கொடுமையை வகுத்துக்காட்டிக் "கல்லார்கண் பட்ட திரு இன்னாது" என்பதைத் தள்ளரும் வாய்மையாய் நாட்டிவைக்க, அரங்கின்றி வாட்டாடுவார் நம்மவரிற் சிலர், அம்முன்னேற்றத்தையே சுட்டிச்சுட்டி அந்த முறைகளையே பாராட்டுவதை ஆற்றுவார் எவர் !

குறளிலுள்ள இச்செய்யுள், "யாதொன்றுந் தீமையிலாத சொலல் வாய்மையாமோ!" என்றிருப்பதைப் போன்று அபிப்பிராய பேதத்திற்கு இடந்தரக் கூடியதும்; "மாதர் மனம்போல் வேறுபடும்" என்பதைப் போன்று நாணுதற் குரியதும் அன்றே. "கல்லாதார் கண் பட்ட திரு இன்னாது" என்பதன் உண்மையை ஏற்று அதன்படி யாவையும் அமைப்பதற்கு இடையூறுயிருப்பதெது ! கல்வி முதலும், பொருள்வேண்டுமெனின் பின்னும், அடையவேண்டியது உய்வதற்கு அமைந்த முறையாயிருக்கப், "பழையன கழிதலும் புதியன புகுதலும்......" என்றென்று எண்ணியும் செப்பியும், கற்கும் நூல்களின் தன்மையை மாற்றுவானேன்! நூல்களின் தன்மையில் மாத்திரமன்றிப் போதிக்கும் முறையிலும் தலைகீழ் மாறுபாடு அவசியமாயிற்று. மாணவன் தக்க ஆசிரியனை யடுத்து, அவனோடு உண்டு அவனோடு உறங்கி அவனோடு ஓதி, அவனோடு வாழ்ந்து தனித்தனி யாகவேனும், இருவர் மூவருடன் சேர்ந்தேனுங் கற்றுவந்தான் முன்னாளில். நல்லனவொன்றும் இக்காலத்திற்கு ஏற்றனவன்று எனு மொருகொள்கை யாவற்றையும் இயக்குகின்றதாகையால், அம்முறையும் பழையதாய்க் கழிக்கப்பட்டது. சந்தையிற் கூட்டமாய்ச் சேர்ந்து, இரண்டொருவர் தவிர, ஆசிரியன்என்ற பேருக்குமமைதியில்லாதார் பலர்க்குக் கைக்கூலி கொடுத்துக் கற்பதும், அவர் நாட்கூலி வாங்கிச் சொல்லித் தருவதும், பரீட்சை வைப்பதும், அதில் தேர்வதும் பட்டம் பெறுவதும், அப்பட்டத்தைக் கட்டிக்கொண்டு வாயையும் வயிற்றையுங் காட்டிக்காட்டிக் கட்டிடங் கட்டிடமாய் வேலைக்குப் பிச்சையெடுப்பதுமாய் முடிகின்ற மாணவன், புதியது புகுத்தியதன் பரிதாப உருவமாய்த் திரிகின்றான். இந்நிலைகண்டு இரக்கங் கொள்கின்ற சில பெரியோர், "வெறும் படிப்பினால் விளைந்த இக்கட்டு இது; இன்னுங் கொஞ்சம் புதியது புகுத்தினால் எல்லாம் சரியாய்விடும். குண்டூசி, இனிமேல் குண்டூசிக் கல்வியைப் படி நீ, பிள்ளாய்" என்று தேற்றி அதற்காவன முயல்கின்றனர். குண்டூசி செய்யவேண்டியதே தன்கருத்தாய்ப் படிக்கின்ற பள்ளிப்பிள்ளைகள் அக்குண்டூசியைப் போலவேதான் பெரும்பாலும் ஆகிக் குவிகின்றனர். — தாதாத்மியம்.

இவ்விஷயங்களில் நாமிங்குப் பொதுவாய், மிகுதி பற்றித் தோன்றுகின்ற நிலைமையை எடுத்துக் காட்டுகின்றோமென்பதை மறத்தலாகாது. இத்தனை "முன்னேற்றத்திற்கும்" அதற்குரிய முறைகளுக்குந் தப்பிச் சிற்சிலர் மெய்யான கல்வியை அடைகின்றனர். அன்னவர்குலம் அழியாமுன் இந்நிலை மாறுதல் வேண்டும்.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

4. மண்ணிற் கோரு கண்.

324பக்கத் தொடர்ச்சி

சத்துரு சைனியத்தின் மத்தியில் சரபசூரன் உடனுக் கடாரம் விட்டகன்ற புஜங்கனது மனம் தார்வித்தாவிப் பற்றியும் துறந்தும் நினைத்து விடுத்த எண்ணங்கள் வழியிலேயே பற்பல. போரும் கடாரத்திலே நிகழ்த்தி அவ்வரசனை வென்ருலன்றே அந்நாட்டை இவன் விழுங்கிக் கொள்வதும் கூடும். அவ்வாறின்றிப் புவனேச்வரனே போரினை ஏமாங்கதத்திற்கே அனுப்பிவிட்டான். ஆதலால், இச்சமரில் தோல்வியுற்ருல் நஷ்டமேயொழிய வெற்றியில் தனக்கு எவ்வகை இலாபமும் இல்லை. வெம் போர் ஒன்று வீணே விலைக்கு வாங்கியதும், மனைவியும் மகளும் வெறுக்கப் பழகியதுமின்றி விஞ்சியதுஎதுவும் தன் காரியத்தில் புஜங்கன் கண்டிலன். எனவே, அவலமாம் இந்நிலைநின்று நீங்குவதற்கு ஓர் வழிதேடல் இன்றியமையாத தாயிற்று. இன்றியமையாதனவெல்லாம் இயற்றலாகுமோ! ஏமாங்கத நாட்டு வெந்திறல் வீரர்தம் பேராற்றலும், கொற்றவன் வன்மையும், கோட்டையின் காவலும், தன் பகைகடந்த தோள்களின் உரமும், மேல்நாள் சூடிய வாகையின் நீளமும்; யாவும் இவன் சரபசூரனுக்கு அடிக்கடி எடுத்து ஓதினனேனும் அவ்வீரனே போரஞ்சிப் பின்னிடைந்திலன். "புஜங்க, நீ விளம்பும் வீரமெல்லாம் வாய்மையேயானல் அது என் கருத்திற்குப் பெரிதும் இயைந்ததே. ஏதிலர் தமது ஆற்றலைச் சொல்வது கேட்கக்கேட்க என்நெடுவாள் வள்ளுறையுள் குலுங்க நகைக்கின்றது. ஆற்றலுள்ளவர் இயற்றிக்காட்டுவார்களல்லாது இயம்பித் திரியார். ஐய, உன் மொழியை மெய்யாக்க விரைந்து வா," என்றுரைப்பான் சரபசூரன். வாயினல் வெருட்டியே இத்தானைத்தலைவனை ஓட்டிவிடப் பார்த்த வழி புஜங்கனுக்கு இவ்விதம் வீணானபின், சேனை நடந்த தூரம் கடந்ததேனும் அவனது சிந்தனையில் துறையாதும் தோன்றவில்லை இவ்வாறு கலக்கமெய்தித் தன் நாட்டினுள் புகுந்த புஜங்கன் செவியிலே சரபசூரனும், "வீர, எம்மிறையுரைத்தவண்ணம் நின்னை யிங்குப் போகவிடுகின்றேன்: போர்க்குரிய சமவெளியொன்றில் எம் சேனையை இறுத்தி இளைப்பாறுவோம். நீயும்சென்று உன் படையுடன் விரைவில் மீண்டு சமர்செய்ய வருவாய்," என்று ஓதினன். மறுத்துரைக்க எடுத்த நாக்கு புஜங்கனது பொய்வாயுள்ளே தடுமாறியது. சிங்கமுகனுக்கு எதிர் சென்று, 'வேந்தே, நின் கடைவாயில் நெடும்பகை கொணர்ந்துளேன்' என்று கூறிப் பிறகு அவன் முகத்தைப் பார்ப்பது எவ்வாறெனத் தன்னுள்ளே துடித்தனன் புஜங்கன். அவனது முகமும் கண்ணும் மனக்கவற்சியை வெளிப்படுத்தின. அன்னது கண்ட சரபசூரன் வியப்பெய்தி, "ஏனிது! புஜங்க, போரென்னலோடும் ஏக்க முறுகின்றனை? களக் கோழைபோலும் நீ!" என்று செப்பவும், புஜங்கன் அவனைத் தனியிடம் அழைத்துச்சென்று, 'சரப, யான் கோழை யல்லன்; போரும் எனக்குப் புதியதன்று. யுத்தந்தான் உழக்குந்தோறும் உழக்குந்தோறும் வெற்றியே பெற்றியான் பார்த்திருக்கின்றேன். கட்கத்தின் மணிப்பிடியும் கழுந்தோடிக் கிடக்கின்றது காண். எனினும் இந்நாள் அங்கனைவெலாம் நெகிழ்ந்து அச்சமே மேலிட்டு அலமர நிற்கின்றேன்!" என்று நெடிதுயிர்த்தான்.

"நின்னினைவு பிறிதாகப் பேதுறல் எய்தற்குக் காரணம் யாதெனக் கூறுக. புஜங்க, வீரத்திற்கு இழுக்கின்றி நின் இடுக்கணைக் களைவதுங் கூடுமாயின் சூரனது துணைவேண்டி நீ வாயிழந்தவனாய்."

"மறுபடி எனதரசனைப் போய்ப் பார்க்க மனம் கூசுகின்றேன்."

"ஏன்?"

"ஏனெனில்.........ஏனெனில்.......உரைத்துப் பயனில்லை. சொல்வதால் எனக்குற்ற பரிபவந்தான் பெருகும்."

"வீரனாகிய நிற்குப் பரிபவம் உற்றதாயின் அது நீ செய்த குற்றத்தால் விளைவதாயிராது. அம்மன்னன் உனக்கு ஏதோ பெருந்தீங்கு இழைத்திருக்கவேண்டுமென்று மதிக்கின்றேன். இராஜபக்தி ஒரு புறமும் அதற்கு மாருக அவன் செய்த வஞ்சனையின் செற்றம் மறுபுறமும் உன்னை அலைத்துவைக்கின்றன போலும்."

சரபசூரன் இயம்பியவிச் சொல் இருட்குழம்புபோலடர்ந்திருந்த புஜங்கனது மனத்தைத மத்தெனக் கடைய, அதனின்று மீண்டுமோர் கைதவம் புதியதாய்த் திரண்டெழுந்தது. சமயபுத்தி வாய்த்த தனக்கரியது ஒன்றுமில்லை என்று ஒரு நொடியில் புஜங்கன் தேர்ந்தான். 'தானே இருப்பு வலை பின்னி, அதை என் கையில் தந்து, அதற்குள் நேராகத் தானகவே வந்து படுகின்ருன் என்ருல், செவ்வி சிதையாமற் சேகரித்துக்கொள்ளா தொழிவெனே' எனக் கிளர்ந்த முகத்தினனாய், "ஐய, ஆற்றலிற்கேற்ற அறிவும் உடைய நீ, குறிப்புணர்ந்த நன்மதியைக் கொண்டாடுபவனாவேன். எனினும், உணர்வு அறிவுறுத்தும் அவ்வழியே செய்கைக்கு உடன்பட்டு வாராய் ஆயின், செறிந்தடர்ந்த என் மனத்தில் சிந்தித்த நினைவெலாம் உன்பால் உரைத்து, நீ கைகொட்டி நகையாடற்கு ஒரு நிபமே தந்தவனாவேன்" என்ருன்.

"பிறர் துயரங்கண்டு பேய்நகைநகைக்குந் தீய னல்லன் யான். கொடுமை யுனக்கு நின் குலமன்னன் இழைத்துளானாயின் இப்பழியை நானே முன்னின்று தீர்த்து வைக்கின்றேன். மற்று, நீ என் மாட்டுச் சூது ஏதேனும் சாதிக்கச் சிந்தித்துச் சூழ்வாய் ஆனல், புஜங்க அச்சதியை நின் சிரத்தொடு செலுத்திட, யான் பெறுவது சரதம். வீரத்தினிடத்தில் எனக்குப் பொருந்திய ஒரு வாஞ்சனையால் இவ்வுதவி செய்ய நான் முன்வருகின்றேன். ஆதலால் இரண்டகம் இழைக்க நினையாய்."

"சரப, வீரர்தம் வாய்மையில் ஐயம் கொள்வதும் வீரமாமோ! வழங்குமுன் வெருட்டலே நின் வழக்கம் போலும். ஆயின், நின்பால் யாதும் வேண்டேன். இனி, யான் அகன்று படைகொண்டு மீண்டிடுவேன். எனினும், ஐய, சரபசூர, பகைத்தெழுந்து உன்னுடன் சமர் செய்யவோ எனக்கு மனம் வரவில்லையே."

"தோள்வலித் தாழ்வினல் நின் மனம் தளருமாயின், எள்ளினன் போ! பலக்குறை வில்லாத காலத்தும் போரிலே மாளவும் நேரலாம் என்றுதான் அஞ்சியோ...!"

"வயப்படை இயக்கும் திறத்தில் மறவோய், உனக்குயான் எவ்விதத்திலும் தாழ்ந்தவ னல்லன். மற்று, உடலெனக்கு ஒரு பொதியெனை உழலும் யான், அச்சமரிலே சாவதோ என அஞ்சியும் செப்பினே னல்லேன்."

"உரமும் உடையாய், உயிரும் வெறுத்தாய்! ஆயின் போரிடாமுன்னம் புறந்தருவ தென்ன! புஜங்க?

"ஐய, கேள். இந்த யுத்தத்தில் தோற்ருலும் தோற்றேன். உன்னை வென்ருலும் தோல்வியே உற்றவனாவேன். சரப, நான் பெறுவதாம் கொற்றத்திற்கே ஆற்ருது மனம் நலிகின்றேன்."

"புஜங்க, நீ புகல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லை. கல்விப்பயிற்சி யெனக்கு ஓரளவு குறைவே தத்துவ சாத்திர பிரசங்கத்தில் தலையாட்டுவார்போல் உரைப்பது உணராமல் வெறுந்தலை அசைத்துப் போகுமப் போலியறிவு பெற்றிலேன். விளங்கச் சொல்."

"உன்மேல் பெற்ற வெற்றியை விளம்பிச் செயபேரிதான் எம்மூரில் முழங்குந்தோறும் என்மார்பிலே வாரினல் மோதுவது எனத் துடிப்பேன். சரப, துடித்துத்துடித்துப் பதைத் துருகுவேன். அதுவும் உன்பால் எனக்குள்ள அன்பினலென்று எண்ணற்க!"

"ஐப, உனக்குத்தான் சொல்லத் தெரியவில்லையோ, எனக்குத் தான் அறியும் திறம் இல்லையோ, யாதோ! ஊமையும் செவிடும் உரையாடிப் பயனில்லை. புஜங்க, சொல்லவருவதை நேர்முகமாய்ச் சொல்லமாட்டாதவரிடத்தில் எனக்கு எப்பொழுதும் சந்தேகம் ஏற்படுவதுண்டு."

"நண்ப, அச்சத்திற்கும் ஐயத்திற்கும் அறியாமையே காரணம் எனது நிலை இருந்தவாறு நீ முதலில் ஊகித்துணர்ந்த நுண்ணறிவு இதற்குள் துஞ்சியதுகொல்!...சிங்கமுகன் எனக்குப் படுகேடு ஒன்று செய்திருக்க அவனுக்கு நான் வெற்றியும் ஆற்றி வைப்பதோ! அதுவும் நின்னனைய வீரனை வென்று, என்றே தியங்குகின்றேன்."

"என்ன கேடு சூழ்ந்தான் சிங்கமுகன்?"

"நீயே முதலில் இதனை ஒருவாறு ஊகித்துளாய் என்பது கருதியே உன்வயின் கூறினேனல்லாது, மற்றபடி அரசனுக்கு விரோதமாய் மாற்ருன் காதில் இவ்வுரை ஓதியும் இரேன்."

"புஜங்க, சிங்கமுகன் நினைத்த கேடுதான் என்ன? அதைத் தீர்க்குமாறும் எவ்வாறு? இயம்புதி நானும் என்னணியும் நின்னுடைமை. கெடுப்பவரைக்கெடுத்துத் தருமத்தை நாட்டிய பெருமையை என்தலைவன் புவனேச்வர வள்ளலுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற புண்ணியம் எனதாகட்டும்," என்று சாற்றினன் சரபசூரன்.

சொல்லிவைத்த காரியத்தைச் சிதைத்துவிட்ட செய்கைக்கு அஞ்சித் தன்னரசன்பால் செல்ல நாணினனாய்ப் புஜங்கன் வேறு மார்க்கம் காணுததால் சரபசூரனிடத்தில் உண்மையைக் கூறியே அவன்கால் பணிந்து, 'போர் ஒழிந்து நின்னுடு மீண்டேகு' என்று வேண்டிக்கொள்ள எண்ணித்தான் அவனைத் தனியிடம் அழைத்து உள்ளதைச் சொல்லத் தொடங்கினன். ஆனல் கபடற்ற நெஞ்சுடைய சரபசூரன், அவியும் சுடரிற்கு நெய் பெய்வதுபோல் இவ்வொரு வாசகம் உரைத்துவிடலாயிற்று. இதுதான் சமயம். முன் கட்டிய மனக்கோட்டை இடிந்துகிடந்த புழுதியின் மீதே புஜங்கன் படிப்படியாய் மற்றொரு கோட்டை கட்ட ஆரம்பித்தான். ஆகாயசிற்பத்தில் அளவிறந்த வன்மை வாய்ந்த இவன், திண்ணிய உதவி தருகின்றேன் என்று சரபசூரன் அளித்த வாக்கைக் கைகடக்க விடுவனே! "வீர, நினக்கு அரியதொன்றில்லை. நட்பெனும் தன்மையே நின்வயின் காண்கின்றேன். அஞ்சல் அஞ்சல், என நீ வகுத்தமொழி எனது உள்ளத்தைக் கவர்கின்றது." என்றனன் புஜங்கன்.

"ஆம் ஐப, இன்னும் நீ ஆவன உரைத்திலாய்!"

"சரப, கேள் ஓங்கு புகழ் ஏமாங்கதந் தாங்கும் சிங்கமுகன் என்பான், ஐப, இந்த அரசன், சிங்கமுகன் என்பவன், தொல்லாண்மைக் கோவேந்தர் வீற்றிருந்த ஆதனத்தில் வீற்றிருக்குமிவன்......இந்நாட்டின் ஒருபாதி எனக்குத் தந்து முடிசூட்டி வைக்கின்றேன் என்றுரைத்த சொல் மறுத்துவிட்டான்."

"புஜங்க, இந்நாட்டை உன்னோடு பகிர்ந்தாளச் சிங்கமுகன் நினைத்ததேன்?" என வினவினன் சரபசூரன்.

"ஆயின் என்ன ! நான் சொல்வது பொய்யேயோ? இவ்வுரையில் உண்மைகடந்த எழுத்து ஒன்றேனும் இருக்குமாயின் என்வாள் உறைநின்று கழலாமல் போகட்டும். வேதபுரியும் வெகு தூரத்திலில்லை. எனக்கு அரசிருக்கையாக அமைத்ததாம் அந்நகர். புதுச்சுதையின் மணம்மாருச் சுவர்களோடு அங்குக் கோட்டை. கொத்தள கூடகோபுர வரிசைகள் திகழக் காணலாம். நீ நிற்கும் இப்பூபாகம் எனதே வாய்மையில் ஆய்விட்டது. வெண்ணெய் திரண்டெழும் போது, ஐய, அப்பொய்மன்னன் தாழியை உடைத்துச் சிதைத்துவிட்டா னென்ருல்......"

"இஃதுனக்கு நன்கொடையாய்த் தர இசைந்தனனே சிங்கமுகன்?"

"நன்கொடையுமன்று. நாட்டை யெடுத்து நன்கொடை அளிப்பவன் சிங்கமுகனே! கொடுவென்று ஒருநாளும் நானவனைக் கேட்டதும் இல்லை."

"மற்று?"

"செவ்வியிற் செய்தவோர் பேருதவிக்கே பிரதிபலனாக எனக்கவன் நாடளிக்கச் செப்பினன். பின் அவன் அந்நன்றியை மறந்தான். மண்ணைப்பிரிய மனங்கொள்ளாப் பேராசையும் புகுந்து அவன் நாக்கை அழித்துவிட்டது."

"எதற்குப் பிரதிபலன் ஏமாங்கதத்தின் பாதியே ஆயது?"

"என்னென்றுரைப்பேன், சரபசூர! உண்மையில் இத்தேயத்து அரசுரிமை சிங்கமுகனுக்கு இல்லை. ஒருநாள்..." வாஸ்தவத்தில் புஜங்கனுக்கு ஒரு பிரதிபலன்தான் கற்பனை செய்ய முடியவில்லை. பொய்யும் பொருந்தியிருக்க வேண்டுமாதலால் முன்னரே நினைத்துவைக்காமா லிப்பொழுது வாயெடுக்க வகை காணுமல் திகைத்தான் புஜங்கன். ஆதலால் அவன் தொடங்கிய வாசகத்தை இடை மறித்து, "ஐய, சரபசூர, எனக்குத் தீங்கே செய்துளான் ஆனலும்

அவன்மாட்டு நான் புரிந்த நன்மையைப் பிறாறிய ஓதுதற்கு வெள்குகின்றேன். வலக்கரம் வழங்கிய உதவியை இடக்கரம் உணர ஒண்ணுதென்பர். நாட்டின் திறம் எனக்கவன் நல்கநினைத்த நிமித்தந்தான் நவில லுற்றேனுயின் அவன் குலத்திற்கே ஊனமாம் சில செய்தி தெரிவிக்க வேண்டி நேரிடும். பாரேனும் எனக்குப் பயக்கா தொழியினும் ஒழிக. நான் புரிந்த உதவியை நானே புகழ்ந்துரைக்க மாட்டேன்," என்று மொழிக்கு மொழி முரண்முழங்கப் பகர்ந்தான்.

"ஆம், புஜங்க, தற்புகழ்ச்சி தகாதெனும் நின் தன்மை நன்று. எத்தகையது அவ்வுதவி யென்பதும் இத்தருணம் பொருளில்லை. மன்னன் ஆயினேன் ஒருவன் வாயினுல் சொன்ன வார்த்தையைச் சிதைத்தனன் என்றபின் அவனைச் சும்மாவிடுவதோ என்பதே எம்கருத்து இங்கு ஆதல் வேண்டும். நிருபர் நாவிற்கும் ஒருநெறி யுளதென்று நாட்டிவைக்கின்றேன்."

"ஆயின், நீ யொன்று செய்திடல் இன்று இன்றியமையாததாயுளது. எனக்கெனச் சமைத்த வேதபுரியும் வறிதேகிடக்காமல் அங்குநாம்சென்று உன் உத்தம கரங்களாலே என்சிரத்தில் முடிசூட்டி வைப்பாயாயின், நண்ப, தமியனை யளித்தது மல்லாமல் சிங்கமுகன் சூதையும் செற்றவனுவாய். புவனேச்வர வள்ளல்தான் போக்கிய இப்படை, வீரமன்றி வாய்மையும் சாதித்தபடி யாகும்," எனப் புஜங்கன் தொழுதற்கு எதிராகச் சரபசூரன், 'செய்தேன்' என்றனன். நடந்த சேனையும் நெறியாறி வேதபுரியை நோக்கிப் பாய்வதாயிற்று. வழிதான் புஜங்கனுக் கெளிதில் மாளுமோ! கடாரப் படைத்தலைவனைப் போற்றுவதும் புகழ்வதும், தான் செலுத்தவிருக்கும் ஆட்சியின் கொள்கையை விளக்குவதுமாய்ப் புஜங்கன் வேதபுரிக்கு இடையுள தூரத்தை அளக்க முயல்பவனுயினன்.

அப்பர்

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

12. பாண்டியநாட்டு ஸ்தலயாத்திரை.

331 பக்கத் தொடர்ச்சி

அப்பர்பாண்டியநாட்டுக் கெழுந்தருளத்தென்திசையிற்போய்த் திருப்புத்தூர் *என்னும் திருப்பதியில் தங்கினுர். அங்கு அவர் பாடிய திருத்தாண்டகப்பதிகம், "திருப்புத்தூரில் திருத்தளியான் காணவனென் சிந்தையானே' என்னும் முடிவுபெற்ற பத்து பாசுரங்கள் அமைந்தது. இது அக்காலத்தில் அழகிய †வீடுகள்நிறைந்து தென்றல் சுகமாய் ‡வீசப்பெற்ற வீதிக ளுடையதெனவும், $ நீர்வளம் ¶ நிலவளம் பொருந்திய தெனவும் இப்பாசுரங்களிற் காண்கின்ருேம் ×.

* இது அம்மயநாய்க்கனூர் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 16-மைலில் உள்ள திருக்கொடுங்குன்றத்திற்கு (பிரான்மலை) தென்கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 15 மைலில் உள்ளது.

† "செறிபொழில் சூழ் மணிமாடத் திருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சிந்தை யானே"
திருப்புத்தூர்—திருத்தாண்டகம் 7. வரி 4.

‡ ....அந்தண தென்றல்
இக்கணைந்து வருமருங்கிற் றிருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சிந்தையானே" ஷை 8.

$ ....“வளங்கொண் மேதி
சேடேறி மடுப்படியுந் திருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சிந்தை யானே" ஷை 4.

¶ "புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவனமேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி னுன்காண்
விரைகொன்றைக் கண்ணியன்காண் வேத நான்கும்
தெரிந்துமுதற் படைத்தோனைச் சிரங்கொண் டோன்காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பங்கத் தான்காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சிந்தை யானே" ஷை 1.

× திருஞானசம்பந்தர் திருப்புத்தூரில் பாடிய தேவாரத்தை நோக்கின் அப்பர் இவ்வூரைப்பற்றிச் சொல்லியவற்றின் உண்மை விளங்கும்.

திருப்புத்தூரை அப்பர் நீங்கித் திருவாலவாய் என்னும் பாண்டிய ராஜதானிப் பட்டணமாகிய மதுரையில் சொக்கனுதர் திருக்கோயிலுக்குச் சென்று வலங்க வந்து பின் உள்ளேசென்று, "தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றே னுனே" என்னும் திருத்தாண்டகமும், "ஆலவாயி லப்பனே * அருள் செய்யாயே" என்னும் திருநேரிசையும் பாடினுர். அந்நகராளும் கூன்நிமிர்ந்த சுந்தரபாண்டியனுரும், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனுரும் வணங்கித் தன்னைத் தொழுதேத்த அவர் மதுரையில் சில கால மிருந்ததாகச் சேக்கிழார் கூறுவார். ஆயினும் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இவர்களைப்பற்றிய குறிப்பு அப்பர் தேவாரத்தில் காணப்படவில்லை. காரணம் யாதோ. இதன்றியும் இவ்விரண்டு பதிகங்களிலும் சமணரைப்பற்றியவிஷயம் யாதும் எடுத்துக் காட்டவில்லை. இவற்றிலுள்ள பாசுரங்கள் சுத்தமான பக்திரசமும் ஞானரசமும் ‡ நிறையப்பெற்று விளங்குகின்றன.

மதுராபுரியிற் சிலநாளிருந்து தெற்கே செல்வாராயினராய்த் திருநாவுக்கரசுநாயனுர் திருப்பூவணத்தை

* ஒருமருந் தாகி யுள்ளா யும்பரோ டுலகுக் கெல்லாம்
பெருமருந் தாகி நின்றாய் பேரமு தின்சு வையாய்க்
கருமருந் தாகி யுள்ளாய் ஆளும்வல் வினைகள் தீர்க்கும்
அருமருந் தால வாயி லப்பனே யருள்செய் யாயே
—திருவாலவாய்-திருநேரிசை-3.

‡ வாயானை மனத்தானை மனத்து ணின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னுனே.
—திருவாலவாய்- திருத்தாண்டகம். 8

யடைந்தார் $. கோவண மூடித்த கோலமும் * கோளரவசைத்த கோலும், † சாம்பல்பூசித் திருவுருவிளங்குவதும் ‡ யாவர் சித்திரத்தில் எழுதக்கூடும் என்னும் கருத்தைக் காட்டுவதுபோல், பதினெரு பாசுரங்க ளமைந்த ஒரு திருத்தாண்டகப் பதிகத்தில் "பூவணத்தெம் புனிதனுர்க்கு" எவ்வெவ்வித அலங்காரங்கள் காணப்படுகின்றன வென்பதைப் பாடினுர்.

திருப்பூவணத்தினின்று திருவிராமேச்சுரத்தை நோக்கிச் சென்றனர். * 'மதியினுன் மால்செய் கோயி" லைக் கண்டுவணங்கித் தமிழ்மாலைகள் பாடுவாராயினர். அப்பதிகங்களுள் இக்காலத்தில் நமக்குக் கிடைத்த திருநேரிசை ஒன்றே சேக்கிழார் காலத்திலுமிருந்த பதிகமென்று நாம் அநுமானிக்கலாம். ஏனெனில் திருக்குறுந்தொகை திருத்தாண்டகங்கள் வழங்கியிருப்பின் அவற்றைச் சேக்கிழார் மொழியாதுவிடார்.

இப்பதிகத் திருநேரிசைப் பாசுரங்கள் பதினென்றும் மிகவும் அற்புதமானவை. இலங்கையிலிருந்த அரக்கர்கள் † குன்றுபோற் றோளுடையவ ராயினும் குணமில்லாதவர்க ளென்றும், "பாசமும் கழிக்கில்லர்" என்றும், ‡ "ஆர்வல நம்மின் மிக்கார்" என்ற அவ் வரக்கர் "பலவுநா டீமை செய்து பார்தன்மேற் குழுமி வந்து, கொலைவிலார் கொடியர்" என்றும், அத்தகையரைப் பொருது தொலைத்த திருமால் செய்த கோயிலை நாடி வாழ்வதே நன்னெறி யென்றுங்கூறினர். இப்பதிகம் இராமஇராவண யுத்தத்தை, இராமாயணவிஷயத்திற்குப் பேதமாகச்$சில இடங்களிற் கூறுகின்றது. கூர்மபுராண ஆதாரவைக் கொண்டோ, எனு எந்த ஆதரவாலோ, இத்தகைய பேதங்கள் ஏற்படுகின்றன வென்பதைக் கற்றோர் ஆராய்தல் நலம்.

$ திருப்பூவணம் ஒரு ரயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலை மார்க்கமாய் அரைமைலில் கோயி லிருக்கிறது.

* படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்று நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளும் தோன்று
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே
—திருப்பூவணம்-திருத்தாண்டகம் 4

† செறிகழலும் திருவடியும் தோன்றுந் தோன்றுந்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்று
நெற்றிமேற் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே
—ஷை-8

‡ "பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே"
—ஷை-1-வரி 4

* திருவிராமேச்சுரம்-திருநேரிசை 1 வது பாசுரம்.
† ஷை 4 ஷை 6 ஷை 8.
‡ (உதாரணம்)
கோடி மாதவங்கள் செய்து குன்றினுர் தம்மை யெல்லாம்
வீடவே சக்க ரத்தால் எறிந்துபின் னன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே
—திருவிராமேச்சுரம்— திருநேரிசை 9.

முத்துக்கள் விசேஷமான இச்சமுத்திர தீர * க்ஷேத்திரத்தை விட்டபின்னர், திருநாவுக்கரசு நாயனுர் பாண்டியநாட்டின் தெற்குஎல்லையா யுள்ள திருநெல்வேலிக்குச் சென்று, காளையார்கோயில் என வழங்கும் திருக்கானப்பேர் முதலிய கோயில்களைத் தொழுது பதிகங்கள் பாடினுர் என்று பெரியபுராணம் கூறும் †. ஆயினும் திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய பாண்டியநாட்டுத் திருப்பதிகளில் அப்பர் பாடிய பதிகங்கள் திருமுறைகளில் நமக்குக் கிடைக்கவில்லை.

13. அப்பர் திருப்புகலூருக்கு மீண்டதும் அப்பதியின் பாடல்களும்.

பாண்டிநாட்டிலுள்ள ஸ்தலங்கள் எங்கும்போய் வணங்கி, அப்பர் சோழநாட்டுக்கு மீண்டனர். அந்நாட்டிலுள்ள பல திருப்பதிகளைப் பின்னும்வணங்கித் தொழுது திருப்புகலூருக்கு வந்து சேர்ந்தார். இந்நகரில் அப்பர் அன்புடனே நாடோறும் கோயில் வாசலில் கையினுற் செய்யக்கூடிய திருத்தொண்டுகளைச் செய்து அளவற்ற பக்தியுடன் வாசம்செய்து வந்தனர். இக்காலத்திலே, நின்ற திருத்தாண்டகம், தனித்தாண்டகம், க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம், குறைந்த திருநேரிசை ("கொன்றை மலர்ச்சடையார் பாற் குறைந்தடைந்த நேரிசை") தனித் திருநேரிசை முதலான பதிகங்கள் பாடியருளினுர். ஆருயிரின் திருவிருத்தமும், சைவத்தைக் குறித்துச் சொல்லிய தசபுராணங்களைச் சுருங்கிச் சொல்லிய பதிகமும், பாவநாசப் பதிகமும், "சரக்கறையோ வென் றனி நெஞ்சமே" என்று பலதரம் எதிர் நின்று சொல்லிய பதிகமு முதலாகிய பிறவும் இக்காலத்தில் பாடிய தென்று பெரியபுராணம் கூறும்.

இத்தகைய நன்னிலையில் நின்ற அப்பர் உழைவாரத்தால் திருக்கோயில் வாசலில் புற்களைச் செதுக்கும்போது உழைவாரப்படை நுழைந்த விடங்களெல்லாம் பொன்னும்நவரத்தினங்களும் விளங்கும்படி சிவபெருமானுர் திருவருள் புரிந்தனர். அப்பரோ பொன்னையும் இரத்தினங்களையும் ஒருபொருளென மதியாதவராய்ப் பருக்கைகளுடன் உழைவாரத்திலேந்திப்பூங்கமல வாவியிற் புகவெறிந்தார். இச்சோதனை செய்த பெருமானுர் பின்னரும் தெய்வலோகப் பெண்களை வானின்று இழிந்து இவர் முன்னர் ஆடல் பாடல்கள் செய்யத் திருவுள்ளம் வைத்தனர். அங்ஙனமே அரம்பையர்கள் பலர் நாயனுர்முன் வந்து பலநேரம் காமத்தை மூட்ட முயன்றனர். அப்பரோ, பரமசிவன் திருவடிகளிலுள்ள மனது தளர்வுறாமல் தமது திருப்

* வரைகளொத் தேயுயர்ந்த மணிமுடி யரக்கர் கோனை
விரையமுற் றறவொடுக்கி மீண்டுமால் செய்த கோயில்
திரைகண் முத்தால்வ ணங்கும் திருவிரா மேச்சு ரத்தை
உரைகள்பத் தாலு மைப்பா ருள்குவா ரன்பி னுலே
—திருவிராமேச்சுரம்-திருநேரிசை-4.

† அங்குறைந்து கண்ணுதலா ரருள்சூடி யகன்றுபோய்
பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப் பேர்முதலா
வெங்குநிகழ் தானங்க ளெல்லாம்புக் கிறைஞ்சுவார்
தொழுதுபல வகையாலுஞ் சொற்றொடைவண் டமிழ்பாடி
வழுவில்திருப் பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுது
மொழுகியகண் பொழிபுனலு மோவாது சிவன்றாள்கள்
தழுவியசிந் தையிலுணர்வுந் தங்கியசீர் மையிற் சரித்தார்
—பெரியபுராணம், 410-411

பணிகளி லாழ்ந்திருந்தார். பின்னரும் இருவினைகளை யும் நோக்கித் "திருவாரூர் அம்மானுக் காள்யான் உம் மால்ஆட்டப்படமாட்டேன்" என்று என்று "பொய்ம் மாயப் பெருங்கடலுள்" என்னும் திருத்தாண்டகம் பாடினர். * புத்தி யாதும் சபலமடையாத திருநாவுக் கரசை அரம்பையர்கள் வசப்படுத்தச் சக்தியற்ற வர்களாய் அவரை வணங்கி நீங்கினர்.

14 அப்பர் முத்தி பெற்றது.

திருப்புகலூரில் அப்பர் மெய் யன்பின்நெறி வழு வாது திருத்தொண்டு செய்துவருநாளில், இனிச் சேவடிக்கீ ழிருத்திடும் என்று எழுகின்ற * ஞானத் தால்,திருவிருத்தங்கள் †பலபாடி, சித்திரை மாதத்தில் சதய நட்சத்திரத்தில் "எண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே" என்னும்திருத்தாண்டகம்எடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "உன் அடிக்கே போதுகின் றேன் ‡ பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று பாடிப் பரமசிவன் திருவடிநீழலை யடைந்தனர். தேவர் கள் மலர்மாரி பொழிந்தனர். ஆகாயத்தில் ஐவகைப் பட்ட பெருத்த வாத்திய ஒலிகள் நிறைந்தன.

* துப்பினைமுன் பற்றறு விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ் வுலக மெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்
வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகன்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்செப் பிடவடைவேன் உம்மால் நானும்
ஆட்டுணே ஞேட்டந்தீங் கலேயேன் மின்னே
—திருவாரூர்-திருத்தாண்டகம்-5.

"மின்னே" என்று ஒவ்வொரு பாசுரத்திறுதியிலு முள்ள மொழியை மகடூ முன்னிலையாய்க் கொள்ளலும் பொருந்தும்.

* தன்னைச் சரணென்று தாளடைந்தேன்
தன்னடியடையப்
புன்னைப் பொழிற்புகலூ ரண்ணல் செய்வன
கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்துத் தன்வினை கட்டறுத்
தேழ்நரகத்
தென்னைக் கிடக்க லொட்டான் சிவலோகத்
திருத்திடுமே
—திருப்புகலூர்-திருவிருத்தம் 1

† இத்தலத்தில் பாடிய திருவிருத்தங்கள் பெரும்பாலும் மறைந்தன. ஒரு திருவிருத்தப் பதிகத்தில் 4 பாசுரங்களே திருமுறைகளில் உள.

‡ தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தன்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி யாதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாப்
பொருளாய உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.
—திருப்புகலூர் - திருத்தாண்டகம் 4.

மாறன் பாப் பாவினம்.

[326-வது பக்கத் தொடர்ச்சி]

தொடைவிகற்பம் வருமாறு.

நேரிசை யாசிரியப்பா.

இரவினி லிருள்கடி முழுமதி வதன
மிதுசிறு பிறைநுத லிவைமுரி புருவவி
லினமணி நிரையென வணிநகை யிலகிய
திணைவிழி யிருகய லிணைபணி மொழிநறை
யிளமுலை மரைமுகை யிடுதிரை யிலையா
லிலைவயி றிமிழ்வளை களமெனு மிருநில
மிமையவ ரிறைவனே டிரதிம னிருடிகண்
மனமரு டகைமட வரலெனு மமுதினே
டளிமுரன் மதுமகி ழணிவர முனிவரை
யளவிய நலனிவ ணமைதனு
மவனெனை யெதிருரை யின்னனு பமனே.

இதனுள் இணைமோனை முதலிய விகற்பமேழும் வந்தமை காண்க. 20

நேரிசை யாசிரியப்பா.

அறமுத லரியெனு மவனே பரனே
யணுவினு ளவனே செகமுணர் பரனே
மனனே கரிசொல வரும்புயல் பரனே
யமுதரு ளினனே யவனே பரனே
திலனே வானே நிறைமுதல் பரனே
வலனே தரிதிகி ரியனே பரனே
யயனே சிவனே யவனே பரனே
யின்னண மமைதர விறையரங் கேசனைப்
பொன்னடி பணிபவர் புகுபதி
பன்னருஞ் சிறப்பிற் பரந்தா மமதே.

இதனு ளிணையியைபு முதலான வேழுவிகற்பமும் வந்தமை காண்க. 21

நேரிசை யாசிரியப்பா

முற்குண னுற்பவ மாதலின் முழுமுதல்
பொற்கம லத்திரு முற்ற முயங்கிய
வற்புத ஞரண ஞமென வுற்றபி
னற்றது பற்றெனி லுற்றது வீடுயர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே
பற்றிலன் முற்றி லடங்கென நற்றமிழ்
கற்றவன் மற்றிரு பற்றறு கொற்றவ
னுத்தம ஞானமுத் திரைக்கையு முகமும்
பத்திமை யாற்றெரி சிப்பவர்
நித்தர்வந் தெதிர்கொள முத்தரா குவரே.

இது, இணையெதுகை முதலாய விகற்பமேழும் வந்த நேரிசை யாசிரியப்பா. 22

நேரிசை யாசிரியப்பா.

அறிவில ருணர்வுள ரெனுமவ ரளவினி
லருபமொ டொளிர்திரு வுருபம துடையனை
யெளியனை யடியவர்க் கேனையோர்க் கரியனைக்
கனவினு நனவினு மறிதுயிற் கண்ணும்
வெண்சங் காழி செம்மணிப் பொன்முடி
காலையு மாலையுங் கண்டுநண் பகலினு
மறவார் மலர்மக ளுதனை
மறவா தவர்பதம் வாழ்த்து மென்னுவே.

இது, இணைமுரண் முதலாகிய வேழு விகற்பமு முறையே வந்தமையான் முரண்விகற்பத் தொடை. 23

நேரிசை யாசிரியப்பா.

நாஅல் வாஅய் மூலமென் றழைப்பச்
சாஅல் புணர்ந்து தாஅன் விரைதலின்
காஅ லெனகிமிர் கலுழனிற் போஒ
யாஅழ நீஇர் வாஅழ் முதலையி
னுஅ ருயிருண் கோஒ மாஅன்
றுஅ தாஅர் பூமகள் சேஎர்
மோஒ கூஉர் மாஅ மாஅ
லெனவொரு காலுரை நாவே
நமையொரு காலமு நண்ணு னமனே.

இது, இணையளபெடை முதலாகிய வேழுவிகற்பமு முறையானே வந்தமையா னளபெடை விகற்பத்தொடை. ஆகத் தொடைவிகற்ப முப்பத்தைந்தும், வந்த விவையு மோர் பதின்மூன்று நேரிசை யாசிரியப்பா. 24

நேரிசை யாசிரியப்பா.

கடுவே கயலெனக் கருநெடுங் கண்ணிணை
காமனுங் காமுறுங் காட்சிய காண்முகங்
கிள்ளையின் கிளவியுங் கிளைத்தகைக் கிளையுடைக்
கீதமுங் கீர்த்தி கீரமுங் கீரே
குவடுடைக் குளிர்பொற் குன்றே குவிமுலை
கூர்புதற் கூன்சிலை கூற்றுயிர் கூட்டுணுங்
கெடலருங் கெழுதகை கெழுமுபு கெழீஇப
கேகயங் கேளொடுங் கேதுறுங் கேழியல்
கைபுனை கைக்கிசை கைக்கிணை கைத்துணை
கொண்டலுட் கொண்டன கொண்டையுங் கொடி
கோடாக் கோவலர் கோற்றொடி கோமான் [யிடை
கௌவுரவ கௌசிகன் கௌசிகங் கௌத்துவ
மணியெனக் கொண்ட மனவி டளித்தோன்
கண்ணகன் குறுங்குடிக் கனவரை
மண்ணகத் துறையுளாய் வளர்கில மகட்கே.

இது, "ககர" வருக்க முற்றுமோனைத் தொடை. இதுவு நேரிசை யாசிரியப்பா. 25

இணைக்குற ளாசிரியப்பா.

தேமகிழ் மார்பன் றுடரியஞ் சிலம்பிற்
றுமரை மலருங்
காமரு குவளையுங்
கோங்கரும் பிணையும்
பூங்கரும் பிணையுங்
தாமலி பூங்கொடி தருமனுக் களியே

இது, ஆறடித்தாய், முதலடியு மீற்றடியு மளவடித் தாய், இடையிற் குறளடி யிரண்டுஞ், சிந்தடி யிரண்டுமாக¶ வந்த இணைக்குற ளாசிரியப்பா. துறை-காட்சி. அலங்காரம் —உருபக வாய்பாட்டால் வந்த உடனிகழ்ச்சி. 26

இணைக்குற ளாசிரியப்பா.

படுதிரை பௌவமும் பானலும் போதும்
* விரிசுடர்க் கதிர்வர விரிமரை மலரும்
† வடுவுங் கணையும்
வடுவும் பிணையும்
அடுபோர்க் கூற்றின் கணிச்சியுங்
கொடுவே லிணையுங் குறிக்கொளுந்
தடமா றண்கட் டாழ்குழ லாயத்
தொடுவாழ் வெய்திட முபநிட தப்பொருள்
நடுவாய்த் தமிழ்மறை நவின்றருண் மாற
னெடுமால் வரைச்சந் தனத்தண் ணிழலே.

இதுவும், பத்தடித்தாய் முதலிரண்டடியு மளவடித் தாகியும், ஈற்றினி ரடி வளவடித்தாகியு மிடையிற் குற ளடி யிரண்டாகியும், சிந்தடி யிரண்டாகியும் வந்த இணைக் குற ளாசிரியப்பா. அலங்காரம்—பலபொரு ளுவமை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை-இயல்பிடங் கூறல். 27

நிலைமண்டில வாசிரியப்பா.

வெண்டிரைப் புனற்கா விரியயல் விரிந்த
வண்டியிர் பாசடைக் குவளைமென் பனிமல
முட்டாட் டாமரை முறுக்குடை நாண்மலர்
அரக்கெறி வள்ளித ழாம்பற் போதுடன்
மேய்தரு கயவாய் மேதிகன் றுள்ளுபு
பணைமுலை சுரந்து பனிற்றுபாற் றடினி
நெட்டிலை யரம்பயி னீடுபொற் கூன்கனி
முடவடிப் பலவின் முட்புறக் குடக்கனி
நெடுவெண் டிங்க ளடுமறுத் துடைத்திடுஞ்
செந்தளிர்ப் பொங்கர் மாவின் றீங்கனி
சுழித்தெடு திரைக்கையிற் றாய்மலர் பலகொடு
பாற்கடற் பொன்னியுட் படிதிரு வுருவங்
காண்பதின் முன்னிய காமர் காட்சியிற்[வளைக்குந்
றுறைதொறுந் துறைதொறுந் துழனியின்
திருவரங் கேசனைத் திருமறு மார்பனை
வாழ்த்தியும் வணங்கியும் மனத்துற நினைக்குன
ரெக்குலத் தெவரே யாயினு *
மக்குலத் தவர்க்கடி யேனடி யேனே.

இது, நிலைமண்டில வாசிரியம். இதனுள், அடை சினை முதலென முறைமூன்று மயங்காமைவந்த வண்ணச் சினைச்சொல். அலங்காரம் - தற்குறிப்பேற்ற வுவமை. திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து. 28

நிலைமண்டில வாசிரியப்பா.

வான்றிக ழுதய மதிமழை முகிற்கீழ்
மீன்றிரி தமர வெண்டிரை வைப்பினு
ளருவியஞ் சுவண வருவரை ஞாங்கர்
வாழ்திற மெனலாய் மதியமு மோதியுங்
காழ்புனை திதலைமென் கதிர்முலைச் சுவடு
முறுப்பமைந் தோவிய முயிர்படைத் தியங்குத
லறியா தாங்க ணணிவரைச் சாரலிற்
செறியா வுடைந்ததென் றிண்ணிய நிறையே.

இதுவு நிலைமண்டில வாசிரியப்பா. பகுதி - பாங்கற் கூட்டம். துறை-உற்றதுரைத்தல். அலங்காரம் - நிரனிறை யுவமை. 29.

அடிமறி மண்டில வாசிரியப்பா.

மன்னோர் நின்றனன் வடமலை மிசையே
முன்னே சிலர்தொழ முயல்வது கண்டே
பொன்னே யலவிடு வதுமொரு பூவே
பொன்னே சிலரெவ னரகெய் துமதே.

இது, அடிமறிமண்டில வாசிரியப்பா. திணை-பாடாண். துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம் - சுவையினு ளிழிவு பற்றிய வழுவை. 30

¶ செய்யுளிற் சிந்தடிகளைக் காணவில்லை. பிரதியின் பிழைபடியிருத்தல் வேண்டும்.

* "விடு சுடர்க்" என்றிருக்கலாம்.

† "கடுவுங்" என்றிருந்தன, "வடுவுங்" என்றிருக்கலா மென வெழுதியுளது.

* ஒருசீர் குறைகிறது.
"எக்குலத் தெவரே யாயினு மக்குலத்
தவர்க்கடி யவர்க்கடி யேனடி யேனே"
என்றிருக்கலாம்.

அடிமறி மண்டில வாசிரியப்பா.

பதிகளி னதிபதி திருமகள் பதியே
துதிகளி னதிபதி தமிழ்மறைத் துதியே
மதிகளி னதிபதி மாறனுண் மதியே
நதிகளி னதிபதி வரசுர நதியே.

இதுவும், அடிமறிமண்டில வாசிரியப்பா. திணையுந் துறையு மிதுவுமது. அலங்காரம் - சாரம். 31

நேரிசை யாசிரியப்பா.

தண்ணறுங் கடம்பந் தார்ச்செவ் வேளனு
மொண்மையுங் காந்தியு முயர்குடிப் பிறப்பும்
வாய்மையுங் குறைபிறந் தொழுகலும் வண்மையுந்
தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு
[மல்லாற்
கன்னலின் வளம்லி கழனிநன் னடும்
பொன்னெடுங் குன்றமும் புரவல புரப்பினுங்
கலைபயின் மாறன் காரிதந் தருள்கார்
மலைவளர் மயிலனை யாட்கு
முலைவிலை யாமென மொழிதலொல் லாவே.

இது, நேரிசை யாசிரியப்பா. இதனுள் "தூய்மையும் வைகலுந் தொடர்பிடை விடாமையு மல்லா" லென நாலா மடி ஐஞ்சீ ரடியாய் வந்தது. இதன் வேறுபாடுங் காண்க. இது, அலங்காரம் - விரியுவமை. பகுதி - வரைபொருட் பிரிதல். துறை - அருவிலை செப்பல். 32

நேரிசை யாசிரியப்பா.

கண்ணன் வானோர் பெம்மான் கார்போல்
வண்ணன் மோகூர் வைகும் மாயோன்
றண்ணந் தாமந் தாரான்
விண்ணின் றிங்கட் கென்செய் வேனே.

இது, ஈரொன் ருசிரியத்தளையான் வந்த, நேரிசை யாசிரியப்பா. திணை - பெண்பாற் கூற்றுக் கைக்கிளை. துறை - கையறல். அலங்காரம் - அவயவியுவமை. 33

நேரிசை யாசிரியப்பா.

மறைநவின் மறைமொழி வகைமயர் வறவுறு
முறைதரு தமிழ்மறை மொழிமகிழ் முனிவனை
யிறையென வுணர்பவ ரெவரவ
ருறைபதி மலர்மக ளுறைபுர னுலகே.

இது, நிரையொன் ருசிரியத்தளையான் வந்த, நேரிசை யாசிரியப்பா. திணை - பொதுவியல். துறை - பொருண் மொழிக்காஞ்சி. அலங்காரம் - சுவையினுள் கல்விபற்றிய பெருமிதம். 34

இனி, கோயிற் கலம்பகத்துள் "கரைபொரு தொழுகுங் காவிரி யாறே" என்னு மகவல்போல, இடையிடை தனிச்சொற் பெற்று முதலே அடி ஐந்து அந்தாதிப்பதாக வோரகவல் பாடவேணும். இரண்டாவது, இவ்விரண்டடியாய் எழுமெட்டுத் தானமாகி, காம் தானம் ஆமடியாய் நேரிசை யாசிரியப்பாவாய்ப் பாடவேணும்.

ஆசிரியப்பா முற்றிற்று.

வில்லி பாரத விளக்கம்

ஆதி பருவம்

அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்.

இதற்கு முன் சருக்கமான இந்திரப்பிரஸ்தச் சருக்கத்தில், திரௌபதி ஒவ்வொருவருடன் தனித் தனி வாழவேண்டுமென்றும், அப்படி வாழுங்காலையில் அவ்விருவரையும், மற்றவ ரெவரேனும் கண்ணுறக் காணின் தீர்த்தயாத்திரைக்குச் செல்ல வேண்டுமென்றும் அடிகோலிய பின்னர், ஐவரில் ஒருவன் தீர்த்தயாத்திரைக்குச் செல்ல ஏற்பட வேண்டியது இயற்கையே.

329 பக்கத் தொடர்ச்சி

தருமர் தன் தம்பியருடன் கூடி அரசாட்சி நடத்தி வரும் நாளில் ஒருநாள்,

அறையோதவ னஞ்சூழ்புவி யரசானவ னைத்துந்
திறையோடிட மறநிற்பதொர் திருவாயின் மருங்கே
பிறையோடிய ரிருகையுமெ டுத்தெண்ணுற முறை
[யோ
முறையோவென வொருவைதிக முனிவந்து புகுந்
[தான்.

[ஒலிக்கின்ற கடல்நீராற் சூழப்பட்ட உலகத்திலுள்ள அரசர்களனைவரும், தங்கள் திறைகளைக் கொண்டுவந்து நெருங்கி இடமில்லாமல் நிற்கும் அரண்மனை வாயிலின்கண்ணே, தலைவரையிலும்தனது இரண்டுகைகளையும் உயரவெடுத்து, கண்டார் எவரும் இவன் செய்கைக்குக் காரணம் யாதோ வென்று எண்ணங்கொள்ள, முறையோமுறையோ வென்று ஆர்த்துங் குரலினனாய்ப் பிராம்மணன் ஒருவன் வந்து புகுந்தான்.]

ஒரு வைதிக பிராம்மணன் தன் குறையைக் கூற கூக்குரலிட்டுக்கொண்டு அரண்மனைவாயி லெய்தினன்.

இச்செய்யுளில் வில்லிக்கு இயற்கையான சந்த வழகு அமைந்திருத்தலோடு, அச்சந்தமும் இடத்திற் கேற்பவும் பாவின் பொருளுக்கு ஏற்பவும் நீண்டும், இரக்கத்தைக் காட்டியும் நிற்கின்றது. இவ்விடத்தில் செய்யுளை மெல்லென நீடிய குரலுடன் வாசிக்க முடியுமேயொழிய விரைவாய் ஓத இயலாது. கடைசியில் முறையோ என்னும் மொழியும் அதன் அடுக்கும் துன்பத்தை வெளியிட்டு நின்றன. இதனைப் படித்த வளவில் முனிவன் செய்கை நம் கண்முன் வந்து காட்டப்படுவதுபோல் இருக்கிறது; தன் இரக்கத்தைக் காட்டி, நம் இரக்கத்தைக் கூட்டி, அவலம்பித்த அவனுடைய குரலும் நம் காதுகளில் நுழைவதுபோற் றோன்றுகிறது. இச்செய்யுளையும் இதற்கடுத்து வருஞ் செய்யுள்களையும் ஓதினால், நடிகர்கள் நம் கண்முன்வந்து நடிப்பதுபோற் காணப்படுகின்றனர். இன்னும் இதுமுதல் அநேகம் செய்யுள்கள் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களே சேர்ந்து, மனத்திற் கினிமையைத் தருகின்றன.

வாயிற்காப்பாளர் அருச்சுனனை அணுகி இச்செய்தியைத் தெரிவித்தார்கள். அருச்சுனன் விரைந்தோடி வந்து, மறையோனை என்னென்று வினவலும், அவன் இடையர் வசமிருந்த தன் தொறுக்களை வேடுவர் கவர்ந்து சென்றார்களென்று முறையிட்டான்.

அஞ்சாதொழி முனிநீயுன தானின்கண மின்றே
யெஞ்சாவகை தருவேனென வேவுக்கொரு திலகன்
வெஞ்சாபமெ டுப்பான்வரு விசயன்றரு மனுடன்
மஞ்சார்பொழில் விளையாடிடு மயில்சீறடி கண்டான்.

['முனிவரே நீர் அஞ்சாதீர்; உமது பசுக்கூட்டத்தை இப்போதே குறைவுபடாமல் உமக்குத் தருகிறேன்' என்று சொல்லி, அம்புஎய்யுந் தொழிலிற்கொரு திலகம்போன்ற அருச்சுனன் தன்வில்லையெடுக்க வரும்போது, தருமனுடன் மேகங்கள் தங்கும்சோலையில் விளையாடிக்கொண்டிருந்தமயில்போன்ற திரௌபதியின் சிறிய பாதங்களைக் கண்டான்.]

வில்வேடுவரோடு போர்புரியத் தன் வில்லை யெடுப்பதற்குச் சென்ற அருச்சுனன், தருமனோடு பொழில் விளையாட்டிலமர்ந்திருந்த திரௌபதியின் அடிகளைக் கண்டான். அச்சமயம் அவள், தன் தமையன் மனைவியாயிருந்தமையால், அவளைக் காலடிகளுக்கு மேற் காணக் கூசினவனாய் முகங்கோட்டித் திரும்பினான் என்பது தோன்ற அடிகளைக் கண்டான் என்று ஆசிரியர் செப்பினார்.

காணுமெய் நடுங்காவெள்ளி கருகாமன மிகவு
நாணுவிரை வொடுசாய்க நாண்வெஞ்சிலை கொள்ளா
சேணுநெறி செல்லாநனி சீறுவமர் வெல்லா
மாணுநிரை மீளவொரி மைப்போதினில் வந்தான்.

[கண்டதும் உடம்பு நடுங்கியவனாய், பொலிவிழந்தவனாய், மனம் மிகவும் நாணினவனாய், பரபரப்புடன் அம்பையும், நாணோடு கூடிய வில்லையுங் கொண்டவனாய், நெடுந்தூரம் சென்று, மிகக் கோபித்துப் போர்வென்று, மாட்சிமை தங்கிய பசுக்கூட்டங்களை மீட்டு ஒரு நொடிப் பொழுதினில் திரும்பினான்.]

உரோமானிய நாட்டில் ஒருகால் தென்னலர் படையெடுத்து வந்தகாலத்தில் அவர்களுக்கு எதிராக ஸீசர் என்னும் தளகர்த்தர் ஒரு சிறு சேனையோடு அனுப்பப்பட்டார். மிலேச்சர் என்று எண்ணப்பட்ட விரோதிகள் பெரும் பலமுடையவராய்த் திரளான போர்வீரரோடு கூடியிருந்தபடியால், தங்கள் சிறு சேனைக்கு என்ன தீங்கு நேரிடுமோ என்றும், தங்கள் நாடு என்ன நிலைகுலையுமோ என்றும், எண்ணி ஊரார் அனைவரும் ஏங்கியிருந்தார்கள். அச்சமயம் படைத்தலைவனை ஸீசரிடமிருந்து ஓர்ஒற்றன் நிருபமொன்றைக் கொணர்ந்தான். அவனைக் கண்டதும் குடிகள் அலறி ஓடிவந்து போர் எவ்வாறு முடிந்ததோ என்று கவலைகொண்டவர்களாய்க் கூடினார்கள். நிருபத்தைத் திறந்து நோக்கினதில், அதில், 'வினி, விடி, விசி' என்னும் லாடின்பாஷா மொழிகள் மூன்றுமட்டும் காணப்பட்டன. அவைகளின் பொருள் என்னவென்றால், "சென்றேன், கண்டேன், வென்றேன்" என்பதே. சேனாதிபதி மிகவும் சுருக்கமாயும் வீண் பெருமையைக் காட்டிக்கொள்ளாமலும் நடந்த வரலாற்றைத் தெரிவித்துக் கடிதத்தை முடித்துவிட்டார். இது ஐரோப்பிய சரித்திரத்தில் மிகவும் பெருமைவாய்ந்த கடிதமாக எண்ணப்பட்டு வருகிறது. நமது வில்லி

"சேணுநெறி செல்லா நனிசீறு வமர் வெல்லா"

என்று ஸீசருக்கு ஒத்தபடியே எழுதியிருப்பது வியக்கத்தக்கதன்றோ? இவர் ஆங்கிலம் அறியாதவராயிருந்தும், தான் சொல்லும் கதையைச் சுருக்கமாகவும், மனத்திற் பதியும்படி அழுத்தமாகவும் சொல்ல வேண்டிய நிமித்தத்தால், ஸீசரைப்போன்றே இயற்கையாகவே அதேபோல் கூறிவிட்டார்.

தொறுக்கொண்டவ ருயிருந்தொறு
நிரையுங்கவர் சூரன்
மறுக்கம்படு மறையோன்மன
மகிழும்படி நல்கிப்
பொறுக்குந்தவ முனிசொற்படி
புனிதப்புனல் படிவா
னிறுக்குந்துலை நிகர்தம்முனை
நிகழ்வோடு பணிந்தான்.

[பசுக்களை அபகரித்தவர்களுடைய உயிரையும்; பசுக் கூட்டங்களையும் கவர்ந்த வீரன், சுழற்சியுற்ற வேதியன் மனமகிழும்படி அவனுக்கு ஆக்களை நல்கி; தவங்களைத் தாங்கிய முனியாகிய நாரதர் சொற்படி, பரிசுத்தமான தீர்த்துறைகளை நாடி யாடும்படி, தராசைப்போல் சமனிலை கொண்ட மனதுடைய தருமரைத்தான் வெளியூர்செல்லும் நிகழ்ச்சிதோன்ற வணங்கினன்]

முன்கூறிய செய்யுள்களைப் போலவே, இச்செய்யுளும் படிப்போர்உள்ளத்தில் ஒருவகைக் கிளர்ச்சியைக் கிளப்புகிறது. இனிமைபயக்கும் ஒழுக்குடையவையாயிருப்பதோடு இச்செய்யுள்களெல்லாம் மோனை முதலியன நன்கமைந்து மிக்கஇனிமையாயிருப்பதால் இவைகளைத் தொடர்ச்சியாய் இங்கெடுத்துக் கூற வேண்டி யிருக்கிறது. இந்தச் சருக்கத்தில் உள்ள முதல் இருபது பாடல்களையும் எடுத்தொரு முறை யோதுவோர்க்குத் தக்க கைம்மாறு கிடைக்கும்.

இச்செய்யுளில் முதலடியில், வேடுவருயிரையும், நிரையையுங் கவர்ந்தவன் என்னுமிடத்து, உயிரும் நிரையும் ஓரே முடிபைப்பெற்று நின்றபோதிலும் பொருள் வேறாயிருத்தல் காணத்தக்கது. உயிர் கவர்ந்தவன் என்னுமிடத்தில் கொன்றவன் என்றும், நிரை கவர்ந்தவன் என்னுமிடத்தில் மீட்டவன் என்றும் பொருள். மறுக்கம்படு மறையோன் மன மகிழும்படி என்னும் இடத்தில் மோனையழகு நோக்கத்தகுந்தது. அவ்வாறே, "பொறுக்குந்தவ முனிசொற்படி புனிதப் புனல் படிவான்" என்னுமடியிலும் மோனை யமைந்திருக்கும்நயம் குறிக்கொளத் தக்கது.

18905

'நிறுக்குந் துலைநிகர் தம்முனை' என்பது தருமருடைய இயற்கையைச் செவ்வனே காட்டிநின்றது. இடருற்றுழியும், இன்பமுற்ற காலத்திலும் சமநிலை கொண்ட மனதை யுடையராதல், சான்றோர்க்கியல்பு. அவ்வாறு இவர் சான்றோரெனவும், பின்வரும் துன்பங்களை மறுகா மனத்துடன் தாங்கவல்லவரெனவும் இங்கே எடுத்துக் காட்டப்பட்டது. வெகுளி கொள்ளவேண்டிய இடமாகிய துகிலுரியுஞ் சமயத்தும், முனிவாறிய முனி இவராதலால் துலைநிகர் முன் எனப்பட்டார். இச்சமயம் தன் பின்னவன் தன்னை விட்டு நீங்கப்போகிறான் என்றறிந்து, அதற்குக் காரணம் தானேயென்று தன் துலாக்கோல் மனத்தினால், கண்ணோட்டமின்றிச் சீர்தூக்கி அறிந்து, தன்னிளையோன் நீங்குவதற்குத் தன் செய்கையே காரணமாகவிருந்ததே யென்று தன்னை நொந்துகொண்டான் என்னும் குறிப்புத்தோன்ற 'நிறுக்குந் துலைநிகர் தம்முன்' என்று கவி கூறினார். மேலும் வார்த்தையாடுமிடத்தும் தான்சொல்லும் வார்த்தைகளை நிறுத்து அவைகளின் பயனையறிந்து பிறமனத்தை ஊறுபடுத்தாமலும், நிறைந்த பொருளோடும் பேசுபவன் அல்லனோ! அருச்சுனன் யாத்திரை செல்லும் விஷயத்தையு மவ்வாறே குறிப்பாக 'நிகழ்வோடு' என்னும் வார்த்தையாலே காட்டினார்.

ஆடம்பரமான அரச வேடத்தை நீத்து, யாவருந் தொழத்தக்கத் துறவிவேடம் பூண்டு, காவியுடையும் சடைமுடியும் தரித்துக் கையிற் கமண்டலங்கொண்டு யாத்திரைக்குப் புறப்பட்டான் அருச்சுனன். கங்கை

யிற் படிந்து நீராடுகையில், அவ்விடத்தில் நாகலோக கன்னிகையர், புனலாட வந்தார்கள். அருச்சுனன், அவர்களுள் உலூபி யென்பவள் வனப்பினைக் கண்டு பிலவழியே யவள்பின் சென்று அவளைக் கடிமணம் புரிந்து, அவளுடன் சின்னா ளின்புற்றிருக்க அவளும் அராவானை யீன்றெடுத்தாள்.

நாகாதிபன் மகண்மைந்த னலங்கண்டு மகிழ்ந்து
நாகாதிபன் மகன்மீளவு நதியின்வழி வந்து
நாகாதிபன் வண்சாரலி னன்னீர்கள் படிந்து
நாகாதிபன் விடுமும்மத நாறுந்திசை புக்கான்.

[நாகலோகத்தரசன் மகளுடைய பிள்ளையின் செல்வியைக்கண்டு மகிழ்ந்து, தேவலோகத்தரசனான இந்திரனுடைய குமாரனும் (அருச்சுனன்) மீண்டும் பிலவழியால் திரும்பி, மலைகளுக்கெல்லாம் சிரேஷ்டனாகிய இமயமலைச் சாரலிலுள்ள பல துறைகளிலும் மூழ்கி, ஐராவதஞ் சொரிகின்ற மும்மத முடைவீசும் கீழ்த்திசையை நோக்கிச் சென்றான்]

மடக்கு சிலேடை முதலிய சொல்லணிகளை வில்லி அடிக்கடி உபயோகிக்கின்றாரென்பதை இதுவரைநம்முடைய நண்பர்கள் அறிந்துகொண் டிருப்பார்கள்.

பிறகு காளிந்திநதி தோய்ந்து, பல பெரியாரொடு கூடிப் பற்பல தீர்த்தங்க ளாடியபின்;

சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை யணுகி
தத்திச்சொரி யருவித்தட வரலக்கிரி சார்ந்தான்.

இஷ்டசித்திகளைப் பெறக் காரணமாயிருக்கிற தென்னாட்டினைக் குறுகி, அருவிகள் தாவிப்பாயும் திருவேங்கடமலையை யடைந்தான்.

தென்னாட்டிற்கு வருதற்குமுன் அருச்சுனனாடிய தீர்த்தங்க ளின்னின்னவை யென விளங்கவில்லை. இந்திரப்பிரத்தத்தை விட்டதும், கங்கையில் நீராடி நாகலோகம் சென்று, இமயமலைச் சாரலெய்திக் கிழக்கு நோக்கிச் சென்றிருப்பானாதல், யமுனையை அடைவது கடினம். கதையை எழுதிக் கவித்திறங் காட்ட வந்தாரேயொழிய நம் நாட்டினர் பூகோளசாஸ்திரம் எழுதவரவில்லை யென்று சொல்வ துண்மையே யாயினும், வில்லி பின்னால் தென்னாட்டினைப் பற்றி யெழுதும்போது பூகோள நிலை தவறாமலிருப்பது நாம் அறியத்தகுந்தது. வில்லி, திருப்பதியிலிருந்து தொடங்கி, ஒவ்வொருநாடாய்ச் சொல்லவாரம்பித்துக் காஞ்சி, திருவண்ணாமலை, பெண்ணைநதிப் பிரதேசம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை, சேது, கன்னியாகுமரி, பாவநாசம், மேற்கடல், துவாரகாபுரி யென்று கொண்டு முடிக்கின்றார். ஆகையால் தென்னாடு முழுவதும் இவர் அறிந்திருந்தார் என்பதற்கு ஐயமில்லை. தென்னாட்டைப்பற்றி விவரிக்கத்தொடங்கும்போதே அவர் தென்னாட்டினர் என்பது தோன்றவும், அவருக்கு அதிலிருக்கும் பற்று வெளியாகும்படியும் 'சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை யணுகி' என்றுஇனிது துவக்குகின்றார். தேசாபிமானம் சிறந்ததென்று எவராலும் கொண்டாடப் படுகிறதன்றோ? அதன் பிரிவாகிய பிரதேசாபிமானம் இவரிடத்தில் தன்னை மறந்து காட்டப்பட்டது. இனிவரும் ஒவ்வொரு செய்யுளும் அந்தந்த ஊரைப் புகழ்ந்து அழகாகப் பாடப்பெற்றிருப்பதைக்காண்கின்றோம். ஆனால் அவைகளைப்பற்றி எழுதப்புகுமுன், சரித்திர ஆராய்ச்சிக்காரருக்கு மிகவும் முக்கியமான விஷயமாகிய, மகாபாரத காலத்தில் ஆரியர் தென்னிந்தியாவைப்பற்றி எவ்வளவு அறிந்திருந்தார்கள் என்பதை நாம் இனி ஆராயவேண்டி யிருக்கின்றது.

மாரிமுத்தின் மனைவி

ஒரு சிறு கதை.

I

நான் பிறந்த ஊர் சேலம் ஜில்லாவிலே காடனூர் என்பது. என் தந்தையின்பெயர் செல்லப்பன். அவருக்குத் தொழில் சித்திரவேலை. புராணக் கதைகளில், மணம் போர் முதலிய முக்கிய நிகழ்ச்சிகளைக் கருநாடக முறையில் சித்திரித்தும், கிராமங்களில் அவ்வப்போது நடைபெற்ற திருவிழாவுக்கும் விவாகத்துக்கும் பல்லக்கு அலங்கரித்தும் கூலியாகப் பெற்ற சிறிதுபொருளைக் கொண்டு அவர் அரிதாகப் பிழைப்பு நடத்திவந்தார். என் தாயினிடத்தில் அவர் அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். அவர்களுக்கு என்னையன்றி வேறு குழந்தைகளில்லாமையால் என்னைச் சீருஞ்சிறப்புமாய் வளர்த்துக் கட்டுதிட்டங்களுக்குட்படுத்தாமல் சிறுவயதிலேயே தறிதலையாக்கிவிட்டார்கள். என்னைச் சிறிதுநேரம் காணாவிடினும் எனது அன்னைக்குக் கண் பூத்துப்போம்.

எங்கள் இல்லம், காலங்கண்ட மூன்று மாமரங்கள் ஓங்கி வளர்ந்து தண்மையளித்த விரிந்த முன்றத்தையுடைய ஒரு சிறு குடிசை. அது, எங்கள் ஊர்ப் பிள்ளையார் கோவிலுக்கும் அதனையடுத்த ஊர்க்குளத்துக்கும் பக்கத்தில் மற்றைய வீடுகளினின்றும் சிறிது விலகி, எளிய வாழ்க்கையை நடத்துவோர்க் குறைவிடமாயினும், பார்வைக்கு அழகாயிருந்தது.

நான் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படியாமலும், தந்தைக்குட்பட்டுக் குலத்தொழிலைக் கல்லாமலும் என்போன்ற அடங்காத சிறுவர்களோடு கூடிக் காலம் இடம் என்ற வரையறையின்றிக் கண்டபடி திரியத் தலைப்பட்டேன். தாய் தந்தையர் ஒருவேளை கண்டித்தாலும் பொருட்படுத்தாது, தந்தை கண்ணிற் படாமலும், தாயின் அன்பு குறையாமையை உணர்ந்து அவளை வஞ்சித்தும் உள்ளபடியே, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய், வளர்ந்துவந்தேன். என்னைக் கட்டுப்படுத்துவதற்கு வழி தேடிக்கொண்டிருந்த என் தாய்தந்தையர்கள் எனக்குக் கலியாணம் பண்ணிக் கண்குளிரப் பார்க்கவேண்டும் என்ற அவாவினால் அடுத்த ஊரில் எங்கள் குலத்தவனான ஓர் ஏழையின் மகளை மணம்பேசி முடித்து, எனக்கு விவாகம் நடத்துவித்தார்கள். என் மனைவிக்கும் உடன் பிறந்தார் ஒருவரும் இல்லை. அவள் எலுமிச்சம் பழத்தையொத்த நிறமும் பெரிய கண்களும் சிறிய இடையும் அமைந்தவள்; எனக்கு ஆறு வயது இளையவள். அப்பொழுது எனக்கு வயது பதினொன்று.

இப்படியிருக்கும் நாளிலே, என் தாய்தந்தையருக்குத் தெரியாமல் சில வாலிபர்களோடு கூடிக்கொண்டு திருவிழாப் பார்க்கும்பொருட்டு ஒருநாள் சேலத்துக்குப் போனேன். அங்கே பொன்கடுக்கனும், பட்டுக்கரை வேட்டியும், செம்பட்டாற்செய்த மேல்வேட்டியும், கடவுளருளிய கரிநிறத்தோலும், காலில் மிஞ்சியும் ஜோடும் அணிந்திருந்த ஒரு கண்காணி என்னைப்பார்த்து வலியவந்து பேசி எனக்கு நண்பனானான். அந் நண்பன் எனக்கு மிட்டாய்க் கடையிலே

வடையும் தேன்குழலும் காபியும் வாங்கிக்கொடுத்து, புதுவேட்டிகள் பரிசளித்து, இதமான பேச்சுகள் பேசினான்; கையில் இருபதுரூபாயு மிட்டான்; அன்றிரவு 'ட்ராமா'வுக்கும் அழைத்துக்கொண்டுபோனான். நாடகம் முடிந்தவுடன் மறுநாட் காலையில் என் நண்பர்க ளறியாதவண்ணம் என்னைச் சேலத்திலிருந்து சென்னைக்கு அழைத்துக்கொண்டுபோனான். அடுத்த நாள் அங்கிருந்து கப்பலேறிச் சிலநாள் பிரயாணம் பண்ணித் தென்னாப்பிரிக்காவை யடைந்தோம்.

II

அந்நாட்டிலே, வெள்ளையர்களுடைய தோட்டங்களிலே கண்காணியின்கீழ், கூலிக்காரனாக ஆறு வருடங்கள் வேலைசெய்தேன். அக்காலத்தில் நான் பட்ட ஜோட்டடிகளுக்குந்திட்டுகளுக்கும் கணக்கேஇல்லை. என் வரும்படியில் முக்காற்பாகத்தைக் கண்காணி கொள்ளைகொண்டான். எனக்குச் சிறிது அறிவுவந்தபின் கண்காணியோடு பகைத்துக்கொண்டு ஓர் இந்தியப் பிரபுவின் வீட்டில் சேவகனாயமர்ந்து ஐந்தாறு வருடங்கள் வேலைபார்த்துச் சிறிதுபொருளைச் சேமித்தேன். பின்பு இந்தியர்கள் குடியேறியிருக்கும் பக்கத்திலே சொந்தக் கடையொன்று வைத்து நடத்திச் சில வருடங்களிலே ஐயாயிரம்ரூபாமீத்துவைத்தேன். இதற்குள் ஐந்தாறுமுறை நோய்வாய்ப்பட்டுஅரிதிற் பிழைத்தேன். அடிமை, ஏமாற்றம், புறக்கணிப்பு, திட்டு, உதை, நோய் என்னும் பாடசாலைகளிற் பயின்று உலகஅறிவு என்னும் வித்தை நெடுநாளைக்குப் பின் கைவரக்கண்டேன். அடிக்கடி என் தாய்தந்தையரையும் மனைவியையும் சொந்தவூரையும் தாய்நாட்டையும் எண்ணியெண்ணி நெட்டுயிர்த்தேன். பகற்பொழுதில் நான் கைவிட்டுவந்த பெற்றோரின் கதி யாதாயிற்றோ என்று நினைந்துநினைந்து கண்ணீருகுத்தேன். இராப்பொழுதில் கனவிலே என்காதலியென்னருகிருந்து பேசவும் புல்லவுங் கண்டு, விழித்தெழுந்து, காதல் பிரிவாற்றாமை என்னும் புணையைத் துணையாகக்கொண்டு இரவைக் கடந்தேன். உற்றார் பெற்றோரையும், தாய்நாட்டையும் எங்ஙனமாயினும் மீளவும் அடைதல்வேண்டும் என்று உறுதி செய்துகொண்டு, ஒரு பொழுதுண்டும் ஒருபொழுது பட்டினியிருந்தும் இன்னுங் கொஞ்சம் பணம் மீத்துவைத்தேன்.

இங்ஙனமாகத் தென்னாப்பிரிக்காவில் இருபது வருடங்கள் கழிந்தன.

III

மீத்த பணத்தை நோட்டாகா மாற்றிப் பத்திரப்படுத்தி எனக்குற்ற நண்பர்களிடம் செலவு பெற்றுக்கொண்டு, தென்னாப்பிரிகாவிலிருந்து கப்பலேறிச் சில நாள் பிரயாணம் பண்ணிச் சென்னைக்கு வந்து, சென்னையிலிருந்து சேலத்துக்குப் போனேன். தாய் தந்தையரின் கோலத்தையும் மனைவியின் கற்புநிலையையும் நேரிலே பார்த்தறிய விருப்பங்கொண்டு அதை நிறைவேற்ற வழி எதுவென்று சிந்தித்தேன். நான் பல நாட்களாய் மயிர்களைந்துகொள்ளாம லிருந்தமையால் மீசைதாடிகள் நீண்டு வளர்ந்து சாமியார்வேடம் பூண்டுகொள்வதற்கு ஏற்றவையா யிருந்தன. தலையிலும் கழுத்திலுல் உருத்திராக்கமாலைகளை யணிந்துகொண்டேன். கழுத்துமுதல் பாதம்வரையிலும் நீண்டு தொங்குமாறு காவிதோய்த்த ஓர் அங்கியைத் தரித்துக் கொண்டேன். செருப்பு, குடை, திருநீற்றுப்பை, கமண்டலம், கம்பளி சகிதமாய் என்னூருக்குப் புறப்பட்டேன்.

நெடுந்தூரம் வழி நடந்து மாலை எழுமணிக்கு என்னூரை யணுகினேன். எனக்கு நினைவிருந்த பாட்டைகள் மரங்கள் கேணிகள் வேலிகள் முதலியவற்றைக் காணுந்தோறும் என் நெஞ்சிலே பழைய எண்ணங்களும் புதிய உணர்ச்சிகளும் குதித்தெழுந்தன. வழியில் வந்த ஓரிருவர் என்னை யறிந்துகொள்ள வில்லை. ஊர் முன்னையினும் பெரிதாய் இருந்தது. ஊரின் தென்கோடியில் நான் சிறுவனாயிருக்கையில் ஆடிக்கொண்டிருந்த செக்கு இப்பொழுது அங்கே இல்லை. அருகிலிருந்த ஒற்றைத் தென்னைமரம் இப்பொழுது காய்ப்பொழிய, மட்டைகள் வீழ்ந்துபோய் மொட்டையாக நின்றது. முன்பு கள்ளி முளைத்திருந்த சில இடங்களிலே புதியவீடுகள் கிளைத்திருந்தன. சிறுவயதில் நான் அறிந்திருந்த சில மரங்களும் இடங்களும் இப்பொழுது பார்க்கையில் குறுகித்தோன்றின. நான் சிறுவனாயிருக்கையில் துவரை மாறால் பின்னிய வேலியினுள்ளே கம்பந்தட்டு வேய்ந்த ஒரு குடிசையிலே, பன்றிகள் பன்றிக்குட்டிகள் உள்ளிட குடும்பத்தோடு வசித்திருந்த குறவனுடைய குடிசை இப்பொழுது காணப்படவில்லை. காளியம்மன்கோவிலில் என் காலத்தில் புதிதாய்ச் செய்துவைத்திருந்த குதிரைகள் மாண்டு மண்ணில் விழுந்துகிடக்கப் பல புதிய குதிரைகளும், காலும் வாலும் தலையும் சிதைந்துபோன சில பழைய குதிரைகளும் நின்றுகொண் டிருந்தன". இவற்றைப் பார்த்துக்கொண்டே ஊருக்குட் புகாமல் தென்புறமாய் ஒதுங்கிச்சென்று பிள்ளையார் கோவிலை யடைந்தேன்.

IV

பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் குப்பை கூளம் நிறைந்த ஒரு பாழ்ங் கூடம் இருந்தது. அதன் நடுவிலமைந்த சாளரத்தின் வழியாய்ப் பார்த்தால், கோவிலுக்கு எதிர்ப்புறத்திலுள்ள குளமும் அதன் படிக்கட்டுகளும் தென்படும். நான் என் மூட்டையைக் கீழேவைத்து அச் சாளரத்தண்டையிலிருந்த ஒரு கல்லின்மீது உட்கார்ந்தேன். குளத்துக்குவந்து நீர் மொண்டு போகையில் பெண்கள் பேசிய பேச்சும் அன்னார் காலடி யோசையும் அரைகுறையாய் என் காதில் வீழ்ந்து கொண்டிருந்தன. நான் தலைகவிழ்த்து என் தாய் தந்தையரைக் குறித்தும் மனைவியைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டிருந்தமையால் மாலை நேரங் கழிந்ததையும் உணர்ந்திலேன். ஓரிருமுறை திடுக்கென எழுந்து குளத்துக் கப்பால் அண்மையிலிருந்த என் வீட்டை எட்டிப் பார்த்தேன். மரங்களுக்கும் வேலிக்கும் இடையில் வீடுஇருந்தமையால் அங்கு நிகழ்ந்ததொன்றும் புலப்படவில்லை. ஆசை முன்னிழுக்க அறிவு பின்னிழுக்க உள்ளம் இடையூச லாடிற்று.

V

எட்டுமணி ஆயிற்று. அன்றிரவு பட்டப்பகல் போல் நிலவு காய்ந்தது. குளத்தைச் சூழ்ந்திருந்த பொருள்கள் யாவும் பாலில் முழுகி யெழுந்தன போன்று தோன்றின. குளத்தின் நீரினுள் நிலவு புகுந்துகொண்டமை கண்டு வெருண்டனபோல் இடையிடையே மீனும் தவளையும் துள்ளுவதும் குதிப்பதும் அன்றி அங்கே குடிகொண்டிருந்த அமைதிக்கு வேறொன்றும் இடையூறு விளைக்கவில்லை. படித்துறை வருவார் போவாரின்மையால் ஒலியடங்கிற்று. நான் இவற்றை யுற்று நோக்கிக்கொண்டிருக்கையில் என் கண்முன்னே படிக்கட்டின்மேல், இடையிலே மண்குடமும் முழங்காலுக்குக் கீழ் கிழிந்து தொங்கிய சேலையையும் தாங்கிய பெண்ணுருவம் தோன்றிற்று. அந்நிலவு வெளிச்சத்தில், அப்பெண்ணின் எலுமிச்சம் பழத்தையொத்த நிறமும் பலநாட்களாய் எண்ணெய் அறியாத கூந்தலும் விளக்க முற்றுத் தோன்றின. என் நெஞ்சு துடி துடித்தது. அவளை என் மனைவி யென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. நான் அறியாமலே அவள்பாற் செல்வதற்கு ஓரடி யெடுத்துவைத்தேன். ஓரடி யீரடியாகுமுன் நான் கண்ட காட்சியால் மெய்ம்மறந்து நின்றுவிட்டேன். அப்பெண் நீர்மொண்டு குடத்தை யொரு படியின்மீது வைத்து, எதிரே இருந்த பிள்ளையார் கோவிலை நோக்கி, 'என் அப்பா, நான் எவ்வளவு நாளக்கி இப்படி அவதிப்படுவேன்? இன்னும் மன

மிரங்கவில்லையா? என் காலமெல்லாம் இப்படியே கழியுமா?' என்று சொல்லிக் கைகூப்பிக் கண்மூடி ஒரு கணப்பொழுது கும்பிட்டுக் குடத்தையெடுத்து இடையில்வைத்து இரண்டுபடி யேறினாள். சடுதியில் அவள்முன் ஒருவன் தோன்றி, 'எத்தனைநாள் என்னை நீ யிப்படி அலைக்கழிப்பே? இனி நான் பொறுக்க மாட்டேன். நீ என்ன சொன்னாலும் கேட்கமாட்டேன்' என்று சொல்லி அவள் கையைப் பிடிக்கப் போனான். அவள் 'ஊம்' என்று ஒரு அதட்டு அதட்டி, 'வேண்டாம், கெட்டுப்போவே, தொடாதே, எட்டிப்போ' என்று உரத்துக் கூவி, ஒரு நொடிப்பொழுதில் படிகளைக் கடந்து வீட்டை நோக்கி ஓடினாள். அவன் திகைத்துப்போய் மறுமொழி சொல்ல நாவெழாது நின்றுவிட்டான். இதற்குள் நான் அவனருகில் வந்துவிட்டேன். நான் வந்ததை அவனறியான். அவன் கழுத்தில் ஒரு கையும் காலில் ஒரு கையும் கொடுத்து அவனைத் தூக்கி அந்தரத்தில் ஓராட்டு ஆட்டி, நடுக்குளத்தில் வீசி யெறிந்தேன் அவன் கதி யாதாயிற்றென்பதைச் சிறிதும் பாராமல் கூடத்துக்கு ஓடி, மூட்டையை எடுத்துக்கொண்டு பரதேசி வேடத்தோடு என் வீட்டு வாசலில் போய் நின்றேன்.

VI

எங்கள் வீடு பாழ்பட்டு வறுமைக் குறைவிடமாயிருந்தது. பல விடங்களில் மேற்கூரை சிதைந்து போகக் கூரையிற் சில பகுதிகள் காற்றில் அங்கங்கே மேலெழுந்து பட் பட் என்று அடித்துக் கவிழ்ந்தன. என் தந்தை விருப்பத்தோடு வளர்த்த கிளி மாண்டு போய் அதன் கூடு துருப்பிடித்து, கம்பிகள் கழன்று விழ, திண்ணையின் கோடியில் கோத்த சங்கிலியில் காற்றில் கிறிச்சுகிறிச் சென்று அசைந்துகொண்டிருந்தது. என் தந்தை சாயமரைத்த கலுவக்கற்கள் வீட்டுக்கு வெளியே திண்ணையோரத்தில் காற்றிலும் வெய்யிலிலும் பனியிலும் மழையிலும் காய்ந்தும் நனைந்தும் தம்மிற் பட்ட சாயம் நிறந்திரிய மாசுற்றுக் கிடந்தன. வாசலிலே என் மனைவி காடுதோறும் அலைந்து பொறுக்கிச் சேர்த்த விறகுக் கட்டுகள் இரண்டு—ஒன்று அரை குறையாய்ச் சிதறியும், மற்றொன்று கட்டுக்குலையாமலும் கிடந்தன. முன்றிலிலிருந்த சிலமரங்கள் பட்டுப்போயின. வீட்டினுள்ளே நடுவீட்டு மாடத்தில் ஒரு மண்விளக்கு மங்கலாய் எரிந்தது.

திண்ணையிலே ஒரு மூலையில் விரித்த கந்தைப் பாயில் ஒரு பழந் தலையணையின்மேல் தலைவைத்து, என் தாய், எலும்புந் தோலுமாகிக் கந்தை யுடுத்தியவளாய்க் கண்ணொளி யிழந்தவளாய்ப் படுத்து ஒப்பாரி சொல்லிப் புலம்பினாள். வீட்டினுள்ளே எங்கேயோ விம்மிவிம்மி யழுமோசை கேட்டதே யன்றி வெளியே என் மனைவியைக் காணேன்.

என் அன்னை, 'அப்பா மாரிமுத்து, அப்பா மாரிமுத்து, எப்போ நீ வருவே? எப்போ நீ வருவே? எப்போ நான் பாப்பேன்? எப்போ நான் பாப்பேன்? அவளுக்கு எப்போ நல்லகாலம் வரும்? எப்போ நல்ல காலம் வரும்? எப்போ நல்ல காலம் வரும்?' என்று புலம்பி மூக்குச் சிந்தினவள், தடக்கென்று எழுந்து உட்கார்ந்து, 'அவன் நாசமாப் போகான, அவன் கட்டையிலே போகான, கரியாப்போகான, அவளைத் தொட்டகையிலே புத்துமுளைக்காதா, அவளைப்பாத்த கண்ணுலே பாம்பு புடுங்காதா, அவளைக் கூப்புட்ட நாக்குலே கொப்பளம் வாராதா, ஊம்! செய்வானா? செய்வானா? ஏழுமலையானுக்குக் கண்ணில்லியா?' என்று சொல்லி மார்பிலடித்துக்கொண்டு, களைத்துப் போய்ப் படுக்கையில் விழுந்து பேச்சுமூச்சற்றவள் போற் கிடந்தாள். அந்நொடியில் முன்றானையால் மூக்கையும் கண்ணையும் துடைத்துக்கொண்டு வெளியே வந்த என் மனைவி என் தாயினருகில் உட்கார்ந்து, அவளை இருகைகளாலும் அணைத்துகொண்டு, 'மாமி விசனப்பட வேண்டாம். இந்த அஞ்சு வருசமா இப்படிப் பண்ணுதபாடெல்லாம் படுத்தினவன் என்ன கண்டான்? அந்த ஆண்டவனுக்குக் கண்ணில்லையா? இதுக்குமேல் இனி என்ன ஆய்விடும்? ஏழை கண்ணீர் வீணாப் போகுமா? அந்தப்புள்ளையார் இன்னும் எத்தனை நாள் பொறுப்பாரோ பாப்போம்'' என்றுரைநைந்தாள்.

நான் மெல்ல இருமினேன். 'அது யாரு?' என்றாள் என்தாய். 'அதுயாரு?' என்று வினவி என் மனைவி திண்ணையிலிருந்து வாசற்படியண்டை வந்தாள் 'அம்மா நான், ஒரு பரதேசி' என்றேன். 'மாரிமுத்தா? மாரிமுத்தா?' என்றாள் என் தாய். 'அம்மா, நான் ஒரு பரதேசி' என்றேன் மீண்டும். 'மாரிமுத்து எப்பொ வருவான்? மாரிமுத்து எப்போ வருவான்?' என்று கேட்டு என் தாய் என்னுடைய விடையை எதிர்பார்த்திருந்தாள். துக்கத்தை என்னால் அடக்க முடியவில்லை. முன்பின் யோசியாமல் 'இன்று வருகிறான்' என்றேன். 'ஆ! இண்ணக்கி வாரானா? இண்ணக்கி வாரானா?' என்றுசொல்லி, என் அன்னை தன் படுக்கையைவிட்டுத் தடுமாறி எழுந்து தடியொன்றை ஊன்றிக்கொண்டு, தடவி நடந்து வாயிற்படியண்டை வந்து உட்கார்ந்தாள். 'வாரது உறுதியா?' என்றாள். 'ஆம்' என்றேன். 'நீ எந்தஊரு? எங்கெவந்தே' என்றாள். 'நான் ஒரு பரதேசி, பிச்சைக்கு வந்தேன்' என்றேன். என் வார்த்தைகளை உற்றுக்கேட்ட என் தாய் 'மாரிமுத்து!' என்றாள். 'அம்மா, அம்மா' என்று அலறி அவள் கரங்களுக்குள்ளே வீழ்ந்தேன். என் தாய் என்னை இறுகத்தழுவி உச்சிமோந்தாள். என் கால்களைப் பற்றிக்கொண்டு என்மனைவி கோவென்று அலறினாள். எங்கள் வீட்டில் உண்டான இரைச்சலை கேட்டு அக்கம் பக்கத்தார் சிலர் வந்து கூடினர்.

VII

என்தந்தை யிறந்து எட்டு வருடங்கள் ஆயினவாம். என்தாய் கண்ணிழந்து பத்துவருடங்கள் ஆயினவாம். நான் ஊரைவிட்டுப்போன மூன்றும் மாதத்தில் பாம்பு கடிக்க என்மாமன் இறந்தாராம். என்தந்தை யிறந்தது முதல் கூலிவேலைசெய்து என்மனைவியே என் தாயைக் காப்பாற்றினளாம். ஊரில் நாட்டாண்மைக்காரன் மகனாகிய சின்னப்பன் கடந்த மூன்று வருடங்களாய் என் மனைவியைப் பெண்டாள முயன்றான் என்றும்; கொள்ளுக்காட்டிலே அவன் அவளைத் துன்புறுத்தியதும், விறகு கொண்டுவர அவள் மலைக்காட்டுக்குப் போயிருக்கையில் அவன் துரத்தியதும் முதலாக அவனால் அவள் பட்ட கொடுமைகள் இன்னின்னவென்றும் என் தாயும் பிறரும் சொல்லக்கேட்டு; மீசைதுடிக்க, கண்சிவக்க, வியப்பும் விருப்பும் வெறுப்பும் துன்பமும் மாறிமாறி என் நெஞ்சைக் கொள்ளைகொள்ள நான் பித்துப் பிடித்தவன்போல் நிற்கையில், அங்கு வந்தவர்களில் ஒருவன் அன்றிரவு சின்னப்பனைப் பேயடித்துக் குளத்தில் போட்டதென்றும், அவனை வீட்டுக்குக் கொண்டுபோய் மந்திரிக்கிறார்கள் என்றும் சொல்லுதலும் நான், என் மனைவியைக் கடைக்கண்ணாற் பார்த்தேன். அவள், 'நஞ்சினுங் கொடிய நாட்ட மழுதினும் நயந்து நோக்கிப் புன்முறுவல் கொண்டாள்.

அன்றிரவு நெடுநேரம் எங்கள் வாழ்வு தாழ்வுகளைக் குறித்து நாங்கள் பேசிக்கொண்டிருந்து பிரிந்தபின், நானும் என் மனைவியும் தனியேம் ஆயினேம். 'கோளுண்ட திங்கள் முக'த்தாளும் அழுக்கடைந்த புடவை யணிந்தாளுமான அவளைத் தலை முதல் கால்வரையிலும் கண்களால் வாரியுண்டேன். "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ!"

தமிழ்ப் பாடம் 70.

[நளவெண்பா.]

கலி நீங்கு காண்டம்.

வாகுகனே நளன் ஆவான் என்பதை இவ்விதம் தன் மக்களைக்கொண்டு சோதித்தறிந்த தமயந்தி, வீதர்ப்பனிடம் சென்று இச்செய்தியைக் கூறியதை இனிவரும் மூன்று செய்யுள்கள் செப்புகின்றன.

கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்று ணங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது. 65

பொழிப்புரை:—வெற்றிவாய்ந்த இளவரசனையும் இந்திரசேனையையுங் கண்டு நளன் சொல்லிய சொற்களைத் தோழியர் வந்து தமயந்திக்குக் கூறினர். அவ்வார்த்தைகளை அவர் கூறியவளவிலே தமயந்தி மனமழிந்து அழுதவண்ணமாய்த் தரையில் விழுந்தாள்.

கொங்கை யளைந்து குழல்திருத்திக் கோலஞ்செய்
அங்கை யிரண்டு மடுபுகையால்—இங்ஙன்
கருகியவோ வென்றழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேற் கண்ணாள் பதைத்து. 66

பதப்பிரிவு:—கொங்கை அளைந்து குழல் திருத்தி கோலம் செய் அம் கை இரண்டும் அடு புகையால் இங்ஙன் கருகியவோ என்று அழுதாள் காதலனை முன் நாள் பருகிய வேல் கண்ணாள் பதைத்து.

அன்வயம்:—காதலனை முன்நாள் பருகிய வேல் கண்ணாள், பதைத்து "கொங்கை அளைந்து குழல் திருத்திக் கோலம்செய் அம் கை இரண்டும் இங்ஙன் அடு புகையால் கருகியவோ'' என்று அழுதாள்.

பதவுரை.

காதலனை - தன் நாயகனை
முன்நாள் - பழைய நாட்களில்
பருகிய - (ஆசையோடு அருந்துவதுபோல்) நோக்கிய
வேல் - வேலைப்போன்ற
கண்ணாள் - கண்களையுடைய தமயந்தி,
பதைத்து - துடித்து,
"கொங்கை - எனது கொங்கைகளை
அளைந்து - அளைந்தும்,
குழல் - எனது கூந்தலை
திருத்தி - திருத்தியும் (எனக்கு)
கோலம் - அலங்காரம்
செய் - செய்த
அம் - அழகிய (அவனது)
கை - கைகள்
இரண்டும் - இரண்டும்
இங்ஙன் - இப்படி
கருகியவோ - கருகிப்போய்விட்டனவோ''
என்று - என்று
அழுதாள் - (தமயந்தி) அழுதாள்.

விரிவுரை:—முன்னாட்களில் தன்னை அன்போடு அணைத்த நளனது கரங்களை இங்குத் தமயந்தி பரிவினால் பாராட்டுகின்றாள். கார்க்கோடகன் கடித்த விஷத்தினால் உடலம் வெந்து கருகியிருக்கின்றதென்பதை அவள் அறியாளாகையால், சமையற் செய்யும்போது புகை பட்டுப்பட்டுக் கருகினவோ அக்கைகள் என்று இரங்கினாள். நளனுக்கும் இத்தொழில் செய்யும் கதி நேர்ந்ததோ என்பது அவள்படும் வருத்தம். காதலனை முன்னாள் பருகிய வேல் கண்ணாள், என்பது, "வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா வாம நெடுந்தோள்'' என்று முன் கூறியிருப்பதன் பொருளைத் தழுவியிருக்கின்றது. நளனுடைய அழகை அவள் காணுந்தோறும், "அப்படியே அவ்வழகைக் குடித்துவிட்டா லாகாதா'' என்ற ஆர்வத்துடன் பார்க்குமாம் அவள் கண்கள்.

கொங்கை அளைதல் குழல் திருத்தல் முதலிய செய்கைகள், சூளாமணியில் சொல்லியுள்ளபடி, "காமவேகத்தை மெல்ல மெல்லப் பெருக்கியிடும்'' தன்மையன. "குழலையான் திருத்திக் கோதை சூட்டுவன் குறிப்புண்டாயின், மழலைவாய் திறந்து ஓர் மாற்றம் அருளுக மடந்தை'' என்று அந்நூலில் (சூளாமணி, கல்யாணச் சருக்கம், 166வது செய்யுள்) வந்துளது.

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காணெங்கள்
கொடைத்தொழிலா னென்றாள் குறித்து. 67

பொழிப்புரை:—"இந்நகரத்திற்கு வந்துள இருதுபன்னனுக்குத் தேர் நடத்திவந்து சமையல் தொழிலுஞ் செய்கின்ற இவ்வரசன்தான் வள்ளலாகிய நமது நளன்'' என்று தமயந்தி நிச்சயித்துத் தன் தந்தை வீமராஜனிடம் தெரிவித்தாள்.

இலக்கணம்

வார்த்தைகள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும் போது அவ்விரண்டு வார்த்தைகளுக்கு இடையேவேற்றுமையுருபேனும், உருபோடுவேறு சொல்லேதேனும் சேர்ந்துதொக்குஇருக்குமாயின் அத்தொடர்தொகைநிலைத்தொடர் என்று அழைக்கப்படுமென்றும், அவ்வாறு ஒன்றும் தொக்கு இராமல் அர்த்தம் விளங்கும்படி தொடருமாயின் அத்தொடர் தொகாநிலைத்தொடர் என்று அழைக்கப்படும் என்றும், முன் கூறினோம். அத்தொகாநிலைத்தொடர்கள், எழுவாய், இரண்டுமுதல் ஏழுவரையிலுள்ள அறுவகை வேற்றுமைகள், விளி, வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், இடைச்சொல், உரிச்சொல், அடுக்கு, ஆகிய இவைகளுள் ஒன்றாய் இருக்கக்கூடியதையுங் கண்டோம்.

இனி, தொகைநிலைத்தொடர்களை ஆராய்வோம் முதலில் இவைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். குதிரை வாங்கினான், பொன்குடம், என்பனபோல் வரும் தொடர்களை விரித்தால் அவை, குதிரையை வாங்கினான், என்றும், பொன்னால்செய்த குடம் என்றும் விரியும். இப்படி வேற்றுமை உருபு மாத்திரமாவது, அல்லாது வேற்றுமை உருபோடுகூட வேறு ஒருசொல்லும் சேர்ந்தாவது, இரண்டு மொழிகளுக்கு இடையே தொக்கு இருக்குமாயின், அவ்விரண்டு மொழிகளும் சேர்ந்து வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் ஆகும். இவ்விதம் இரண்டு முதல் ஏழுவரையிலுமுள்ளவேற்றுமை உருபுகள் (தனியாகவாவது வேறு ஒரு சொல்லோடும் சேர்ந்தாவது) இடையே மறைய நடக்கின்ற தொடர்கள் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்கள். வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கு இருக்குமாயின், அது வேற்றுமைத்தொகைநிலைத்தொடர் எனப்படும் என்பதையும், வேற்றுமை உருபோடுகூட அர்த்தம் பூர்த்தியாவதற்கு வேண்டிய வேறு ஒரு சொல்லும் தொக்கு இருக்குமாயின், அது வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை என்பதையும் முன் பலவிடங்களில் (வால்யூம். 1. பக்கம், 729. 750) கூறியிருக்கின்றோம். வேண்டிய உதாரணங்களும் முன் பெயர்ச்சொல்லின் வேற்றுமைகளை விளக்கியுள்ள பாடங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்துக் கொள்ளவும்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

12. கார்முகப் படலம்

அழகினுக் கழகு பிறர்நலம் பேணல்.

உண்மைக்கும்,ஓராதபொதுமாந்தர் உரைப்பதற்கும் இடையே கிடப்பது நெடுந்தூரம். கல்லெலுந் தோளினர் கொணர்ந்தவவ் வில்லினைத் தம் மன்னன் திருமுன்னர் வைத்தனர். வைத்தலும்,

போதக மனையவன் பொலிவு நோக்கியவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித்தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறன் மேயினன்.

[யானைக் கன்றுபோன்ற இராமனுடைய அழகையும், வேதனை தருகின்ற அவ்வில்லின் வன்மையையும் மாறிமாறி நோக்கித் தன் மகளது நலங்கருதிப் பரிகின்ற சனகன்தன் மனநிலையை உணர்ந்த சதாநந்தன் பின்வருமாறு சொல்லலாயினன்.]

இக்கோதமன் காதலனுக்கு வேறு எது இருப்பினும், ஒரு வரலாற்றை இனிமையுறச் சொல்லுந்திறம் இல்லையென்றே நினைக்கவேண்டி யிருக்கின்றது. அதனிலும் நமது இளவல் இராகவனது மனம் எவ்வெப்பொழுது அமைதிபற்று ஆத்திரமுற் றிருக்கின்றதோ அவ்வப் பொழுதெல்லாம் இச்சதானந்தன் நெடுஞ் சரித்திரமொன்று, தனக்கே யுரியவொரு சுவையற்ற வகையில் பன்னப் புகுதலாகின்றனன். முன் கன்னிமாடத்தில்கண் ணுற்ற தையலின் நினைவுந் தானுமாய்த் தனியிருக்கப் பதைபதைத்த இராமனுடைய செவிகளைக் கோசிகன் கதையினால் தூர்த்துநிரப்பிய இவ்வீறிலா வொருமுனிவன், "இந்த அடுப்பில் பாலை வைத்தேன் இங்கும் வந்தது பூனை" என்பதேபோல் ஆணமொன்று தாழத் தாளா இந்நிலையிலும் வில்லின் வரலாற்றையும் அதற்கிலக்காகிய சீதையின் வரலாற்றையும் சொல்லத் தொடங்கினான். அன்னம்மாடும் முன்துறையில் காட்சிகொண்ட கன்னியே இச்சனகன்தன் மாமகளா யிருத்தல்வேண்டுமென ஊகித்திருந்த இராமன், "நோற்றனள் நங்கையும் நொய்தின் ஐயன் வில் ஏற்றமேல்" என வேந்தன் உரைத்தது கேட்டதுமுதல், அச்செயலைப் பூர்த்திசெய்து தன் மனத்தினசை நிறைதற்கு இடையூறாய்க் கழிகின்ற நேரமெல்லாம் மிகநொந்து நைந்திருப்பான். எனினும், இந்நிலையிலுள்ள இராமனுக்குக் கார்முகத்தின் தன்மையும் கன்னியின் நலத்தையும் எடுத்துரைத்தல் நேர்மையற்ற மிகையாமென்று யாவருங் கருதார். அதனைச்சொல்கின்ற வகையோ நயமற்று நிற்பதைத்தான் குறைபாகக் கூறநேர்கின்றது. கோசிகனுடைய ஜீவிய சரித்திரம் சுவைத்தொழுகும் பலநிகழ்ச்சிகள் தன்னுள் தாங்கப்பெற்றதெனினும், அதனை முன் நயமிலாச் சொற்களால் தேர்ந்து செப்பினன் இப்புரோகிதன். பிஞ்ஞகன் பிடித்த இப்பெருவில்லின் வரலாற்வையும் பெரும்புகழ்ச் சானகியின் வரலாற்றையும் தானே இயம்புதற்குக் கம்பர் மேற்கொண்டிருப்பாராயின் சுவைபெருகித் தித்திக்கும் செய்யுள் சிற்சில இங்குத் திரண்டெழுந் திருக்கும். கம்பரால் பாடப்பெற சீதைக்கேனும் செவ்வி பல முன்னும்பின்னும் நேர்கின்றன. தக்கனது வேள்வியைச் சிதைத்த இவ்வில்லோ அத்துணைப் பாக்கியஞ் செய்ததில்லை. ஏலவிளம்பர அறிக்கைச்சீட்டுகளில் அறியவேண்டிய விஷயம் மாத்திரம் அமைவதேபோல், சதானந்தர் வரலாறு உரைத்தவகையில் அறியவேண்டியன இருக்கின்றனவேயன்றி உணர்ந்து அனுபவித்தற்கியன்றன தேடலரிது. வான்மீகத்தில் தயரதனது குலமுறை வசிட்டன் கூறினான். அது வழக்குப் பத்திர வம்சாவளியாயிருந்ததென்று இங்குக்கோசிகன் தானேயேற்றுச் செப்பிய திறத்தனைக் கண்டோம். மற்று, வடநூலில் வில்லின் வரலாற்றைக் கூறியது ஜனகன். அது வசிட்டன் குலமுறைக்கே இணையாயிருந்தது. கம்பர் நூலில் சதானந்தன் அதனைக் கூறத் தலைப்பட்டானென்றால், வாய் மாறியதேயன்றி சொல்லொன்றுஞ் சிறக்கவில்லை. வில்லையும் அவ்வில்லின் பரிசிலாகிய வனிதையையும் பற்றி இப்புரோகிதன் பன்னிரு பாடல்களில் சுருங்கக்கூறினனென்ற அவ்வொரு நன்றியே பாராட்டற்பாலது. "பொழிகின்றபுவிமடந்தை திருவெளிப்பட்டதென"ச் சீதை கொழுநுதியில்தோன்றியதை வருணித்திருப்பது போன்ற இரண்டொரு வாசகம் சற்றே நயமென்று நவிலும்படி அமைந்திருப்பதும் சொல்வோன் திறத்தாலன்று; சொல்லப்படுவோள்தன் தள்ளரிய மாண்பினாலாம். இதனையே பின்னர், மூக்கிழந்தகன்ற காமவல்லியாம் மாயக்கன்னி தனதையன்பால் சென்று,

தேர்தந்த வல்குற் சீதை தேவர்த முலகி னிம்பர்
வார்தந்த கொங்கை யார்தம் வயிறுதந் தாளு மல்லள்
தார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையர் சங்க
நீர்தந்த ததனை வெல்வா னிலந்தந்து நிரம்பிற் றன்றே

என்று புனைந்துரைத்ததைக் கருதுங்கால், சதானந்தனுடைய தற்குறிப்பேற்றம் எற்றுக்கு ஆகும்! சீதையைக் காதலித்துவந்த பல மன்னர் தொக்குச் சனகனை அடர்க்கவும், அவன் இளைத்ததுகண்டு இரங்கிய விண்ணவர் படைகள் உதவ, இஃதுணர்ந்தவ் விகல் வேந்தர் உடைந்து அகன்றதற்கோர் உவமை காண்பாராய் நம் சதானந்த முனிவரர், "அற்காக்கை கூகைபைக்கண் டஞ்சினவா வெனவகன்றார்" எனக் கூசாது கூறலுற்றார். எது கூகை? ஜனகனோ! மற்று விண்ணவ ரருளிய தெய்வப்படையோ! அரசர்கள் அஞ்சியகன்ற அவ்விரைவிற்கே இவ்வுவமையை ஏகதேசமாய்க் கொள்ளல்வேண்டு மெனின், இத்தகைய ஏகதேசங்களுக்கு ஏற்ற புலவர் புராணங்கள் பாடுவோர் பிறர் பலருளர்; சொல்வன்மை யில்லாத இச்சதானந்தனை வைத்துக்கொண்டு பாவம், கம்பருந்தான் ஏது செய்வார்.

விண்ணவர் அருளிய படைகளுக்கு வெருவிய வேந்தர்கள் அகன்றபின், சீதைக்கு,

என்றுமினி மணமுமிலை யென்றிருந்தே மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்று,

சதானந்தன், முன் ஜனகன், "ஐயன்வில் ஏற்றுமேல் நோற்றனள் நங்கையும்" என்றுரைத்த மொழிகளைத்தழுவித் தன் கூற்றினை முடித்தான். முடித்தவுடன்,

நினைந்தமுனி பகர்ந்தவெலா நெறியுன்னி
யறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின்
முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம்
மாதவத்தோன்
நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை
நோக்கினன்.

எனக் கம்பர். மேலினி நிகழ்வதற் கிருப்பவைகளை உரைக்கப் புகுகின்றனர். இராமனது நோக்கம் எத்தகையது என்பதைப்பற்றியும், கன்னிமாடத்தில் முன்னாள் தான் கண்ட காரிகையும் இவ்வில்லிற் கியைந்த ஜனகன் திருமகளும் ஒருத்தியோ, மற்று வேறுதான் ஆவாரோ என்னுமிக் கேள்வியில் அவன் மனநிலை இருக்கவல்ல பெற்றியைப்பற்றியும், முன்னொரு சந்தர்ப்பத்தில் ஆராயவேண்டி நேர்ந்துவிட்டதாகையால், ஈண்டவைகளை மீண்டும் இயம்பாது விடுத்தலே நேராம். விச்வாமித்திரனும் இதுபற்றி எக்கருத்து உடையவன் என்பதையும் கண்டுளோம். எனின் சதானந்தன் கூறியவைகளின் நெறியை உன்னிப் புனைந்த தன் சடைமுடியைத் துளக்கியவன் விச்வாமித்திரன் என்று கொள்வதே தக்கதெனத் தோன்றுகின்றது. ஆயின் அக்கோசிகன் வில்லினது வரலாறுகேட்டு யாது நினைந்திருத்தல்கூடும்? 'அரக்கியைக் கோறி' என்று அவன் முன் இராமனை ஏவியதுபோல் இங்கு 'இவ்வில்லை வளைத்திடு' என்று ஏவவில்லை. "போரேற்றின் முகம்பார்த்தான்", பார்த்து, "நென்னற் கண்ட நங்கையும் இவ்வில்லின் வனிதையும் ஒருத்தியே என இம்மைந்தன் ஓராது உழல்கின்றானோ, யாதோ! என்வரையில் பெரிதும் ஐயமில்லை. இவனோ ஐயமே மிகுந்து இவ்வில்லினைக் கையிலுமெடுக்க மறுத்துவிட்டால், என்செய. நாணமீக் கிளர்தரத் தன்காதலை உரைக்கலாற்றாது இச்செம்மல் கனவுற்ற ஊமனென உயங்குவான். அவளே இவளென என்னளவு இவனுந்தேர்ந்து இவ்வில்லினை வளைப்பானாயின் தன் நாணமுங்காத்து நங்கையையும் எய்துவான். ஆதலின் வாய்த்த இச்செவ்வியை வழுவவிடாது அவன் பயன்படுத்திகொள்ளல் வேண்டுமே" என்று எண்ணுவதல்லாது விச்வாமித்திரன் இச்சந்தர்ப்பத்திற் கிணங்க வேறு யாது நினைந்திருத்தல் கூடுமென மதித்தல் அருமையாயிருக்கின்றது. கோசிகன் நினைந்தவெலாம் இதுவாக இருந்தாற்றான் இராமனும் நினைந்தவைகளோடு இணங்குவது இயற்கையாகும். தீராச் சந்தேகம் உடையவர் ஒருநாளும் நன்மையடையார் என்பதை அறியக்கூடிய ஆற்றலுடையவன் இராமன். ஆதலின்,சீதையின்காதலும் அக்காதலுக் கிடைகிடக்கும் இந்நெடுவில்மிசைச் சீற்றமுங் கனற்றப் "பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி பொங்கி யெழுந்தகொழுங் கனலென்ன" இராமன் எழுந்தான். எழுந்தவன் சிலையிருக்கு மிடம்சேருமக்கணத்திற்குள் அம்மண்டபத்தின்கண்சுவைமிகு உரை சில நிகழ்ந்தன.

தூய தவங்க டொடங்கிய தொல்லோ
னேயவன் வல்வி லிறுப்பதன் முன்னம்
சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிரம் வில்லை யனங்க னிறுத்தான்.

[தூய்மையான தவங்களைச் செய்யும் விச்வாமித்திரனது நேயத்தை உடையவனாகிய இராமன் அவ்வலிய வில்லை ஒடிப்பதன்முன், அனங்கன், செம்மையான ஆபரணங்களை யணிந்து அங்கிருந்த மாதர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் வலித்துவலித்துக் கணைகளை எய்துஎய்து ஆயிரம் வில்களை உடைத்தவனாயினன்]

"தொல்லோ னேயவன்", என்பதைத், 'தொல்லோன் ஏயவன்', என்றும், 'தொல்லோன் நேயவன்' என்றும் இருவகைகளிற் கொள்ளலாமெனினும், ஏவுதற்கு அஞ்சியே 'போரேற்றின் முகம்பார்த்தான்.' என முன் கொண்டதற்கிணங்கி 'நேயவன்' எனப் பிரிப்பது தகும். 'காதல் என்றன் உயிர்மேலும் இக்கரியோன்பால் உளது' என்று முன் கோசிகன் உரைத்ததற்கும் இது பொருந்தி யிருக்கின்றது. "தாடகையைக் கொல்" என்று ஏவிவிட்டு அதற்குப் பதிலாக, "அறனல்லவும் எய்தினால், அது செய்க என்று நீ ஏவினால்" தான் செய்துதானே தீரவேண்டியிருக்கின்றது, என்ற வார்த்தைகளைப் பெற்றுள கோசிகன், மீண்டும் ஏவுவதென்பதை இராமன்பால் மறந்தேனும் நினையான். மற்று, நேயவன் எனப்பிரித்தால் அவ்வடி மோனை இன்றி நிற்குமேயென நினைத்தால், ஏயவன் எனப் பிரித்துத் தொல்லோன் என்பது சதானந்தனைக் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும். 'இவன் ஏற்றின் சீதைநலம் பழுதாகாது' என்றவுரையில் ஏவுகின்ற குறிப்பு அடங்கியுளது.

ஆயிரம் விற்கள் இறவிற அனங்கன் எய்தானேனும் அவ்வரசமங்கையர் இவ்விராமனைத் தாமே பெறவேண்டுமென்று காதல் எய்திலர். இப்பேரழகன் தம்மரையன் பெருமகட்கே உரியவன் என்ன உன்னிய அவர் சிந்தையை எற்றியகணையெலாம் பிதிர்ந்துபோயின. மையலால் மதிகலங்கி, இரைத்து வந்து அமிழ்தின் மொய்க்கும் ஈயினம் என்னச் சூழ்ந்தனராய்க் கருப்புவில்லை யிறுத்துத் தங்களையே காக்கும்படி வேண்டிநின்ற மிதிலைமாதரார் வேறுளர் சிலர். அன்னவரை உலாவியற்படலத்திற் காண்போம். ஈண்டிக் கோமனை மண்டபத்தமர்ந்த நங்கையர்களோ, இராமனது அழகை அள்ளியள்ளிப் பருகினரேனும்,

காணு நெடுஞ்சிலை கால்வலி தென்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்
பாணி யிவன்படர் செங்கை புகாதேல்
வாணுதன் மங்கையும் வாழ்வில ளென்பார்.

[காண்கின்ற இப்பெரிய வில்லின் அடி வலியதென்பார். நாணம்மிகுந்த நங்கையாகிய சீதையின் அழகிய சிவந்த கை இவனது விசாலமான சிவந்தகையால் பற்றப்பெறாதானால், பிரகாசம்பொருந்திய நெற்றியையுடைய சீதையும் நல்ல வாழ்வு எய்தாதவள் ஆவாள்]

என்று சானகிக்கே அவனை உரியவனாக்கிப் பாராட்டலாயினர் இராமனது அழகும் சீதையின்பால் அவர்களுக்கிருந்த ஆசையும் அத்திறத்தன. மன்மதனுந் தன் கைசோய்ந்தான். இவ்வாறு பேச்ப்பேச அம்மாதர்களுக்கிடையே ஆர்வமும் மிகுந்தது. தம் செல்வமாம் சீதையும் இச்செம்மலும் சேர்ந்து வாழவேண்டுமென விழைவதனிலும் மிக்கதோ ரூக்க முடையாராகி, அவர்

கரங்கள் குவித்திரு கண்கள் பனிப்ப
இருங்களி றிச்சிலை யேற்றில னாயின்
நரந்த நறைக்குழ னங்கையு நாமும்
முருங்கெரி யிற்புக மூழ்குது மென்பார்.

[கரங்களைக் கூப்பி, இரண்டு கண்களிலும் நீர்சொரிய, பெருமைதங்கிய ரிஷபம்போல்வான் இவன், இவ்வில்லிற்கு நாண் ஏற்றானாயின், கஸ்தூரியின் மணம்பொருந்திய கூந்தலையுடைய இச்சீதையும் நாமும் அழிக்கின்ற நெருப்பில் முழுகிச் சாவோம், என்பார்]

குலமாதரிவர்கட்குத் தம்சீதையின்பாலிருந்ததொரு பரிவு இத்துணைத்து. இராமனைத் தாமணைக்கக் காதலித்தா ரலர். இராமனுக்குரிய எழிலின் தூய்மையையும், சீதையிடத்து அவர்வைத்த ஆசையின் அளவையும் இங்கு நாமொருங்கே காண்கின்றோம். இராகவன் அழகேனும், இக்குலமாதர் நிறையேனும் சீதைக்கவரளித்த அன்பேனும் இம்மியொரு சிறிது தாழ்ந்திருக்குமேல் அனங்கனுக் கன்று கரும்புச்சிலை ஒன்றே சாலும். சீதையின் நலத்தையே வேண்டும்படி இராமனது மாசிலாப் பேரெழில் அம்மாதரைத் தூண்டியது.

எம் சொந்தப் பிரசுரங்கள்.

கோபால் புதிய தமிழ் வாசகம்.

ம-ா-ா-ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

	ரூ.	அ.	பை.
1-ஆம் வகுப்பு	0	2	6
2-ஆம் வகுப்பு	0	3	0
3-ஆம் வகுப்பு	0	4	0
4-ஆம் வகுப்பு	0	4	6
5-ஆம் வகுப்பு	0	6	0

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது	0	5	0
சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது	0	5	0
கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது	0	5	0
சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது	0	5	0
ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது	0	7	0
தமிழ்ச் சிற்றிலக்கண வினவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது	0	4	0
கோபால் வாய்ப்பாடு	0	1	0
புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) ஏ. பரசுராமய்யர் எழுதியது.	0	12	0
கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது	0	8	0
பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது	0	6	0
பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது	0	6	0
சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது	0	10	0
இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது	0	6	0
முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது	0	6	0

English publications.

English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T.,	0	12	0
Nanda the Paraiah Saint by. C. S Rangaswami Iyengar B.A., L.T.,	0	3	0
Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T.,	0	3	0

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. G. PAUL & Co.,

Francis Joseph Street, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவர் மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ 1-4-0 மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

Our Publications.

Kamban's Kosala.

By T. N Seshachalam; A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.
கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.
கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.
எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.
Sambandar (English) விலை „ 4.
Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

வர்த்தமானம்

முக்கிய அறிவிப்பு

திருவொற்றியூரான் சமஸ்க்ருத வித்தியாசாலை

புண்ணியத்தின் உருவாயும், பக்திமயமாயும், விளங்கும் உயர்திரு T. P. இராமசாமிப் பிள்ளையவர்களாற், சூளைப் போஸ்டாபீசுக்குப் பின்புறம், இவ்வித்தியாசாலைக் கென்றே யமைக்கப்பெற்ற 1½ நம்பர்க் கட்டிடத்தில், சமஸ்க்ருத பண்டிதர்களைக்கொண்டு, சமஸ்க்ருதத்தில், வியாகரண காவியங்களும், நியாய மீமாம்சைமுதலிய ஷட்தரிசனங்களும், பிரஹ்மசூத்ரம், உபநிஷத் முதலிய பிரஸ்தானத் திரயங்களும்; இவ்வாறே சங்கத்திற் றேர்ச்சிபெற்ற, தமிழ்ப்பண்டிதர்களைக்கொண்டு, தமிழில் இலக்கண இலக்கிய சங்க நூல்களும், கற்போற்குச் சம்பளமின்றியும், பேதமின்றியும் பாடங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன.

உடையுண வுறையுள் முதலிய வசதியற்ற துறவிகட்கு அவ்வசதிகளனைத்துஞ் செய்துகொடுத்துப் படிப்பிக்கின்றார்கள்.

இத்தகைய வித்யாலயங்கள், வடதேசங்களில் அறநெறி யொழுகுவோரால் நிறுவப்பட்டு, அளவிறந்தன நடைமுறையிற் காணப்பட்டு வருகின்றன. ஆயினுமவைகள், அத்தேயத்தவருள்ளும் குறிப்பிடப்பட்ட சிலர்க்கேயன்றி, நம் தேயத்தினர்க்கும் பொதுமக்கட்குஞ்சிறிதும் பயன்படாமைக் கருத்துட்கொண்டு, அறநோக்கையே தமதியல்பு நோக்காய்க் கொண்டுள்ள, நம் பிள்ளையவர்கள் நம் தேயப் பொதுமக்கட் குரிமையாகவும், என்றும் நின்று நிலவுவதாயுமுள்ள, அத்தகைய வித்யாலயம் ஒன்று, இங்குமமைப்பதுநலமென்று கருதினார்கள். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றபடி கருதியவண்ணஞ் செய்தார்கள். "தனக்கெனவாழாப் பிறர்க்குரி"யாளராகிய அவர்கள், கல்வியைக்குறித்த இத்தகைய அருஞ்செயலில் முன்வந்தது, நம் தேசத்தினரின் பெரிய நன்மையையும், அறிவு முன்னேற்றத்தையும் பெருக்குவதே, தமது வாழ்நாளின் ஊழியமெனக் கொண்டுள்ளாரென்பது, தெரிவிக்கின்றது.

நம் தேயத்திற் பொதுநோக்குடைய வடநூற்பயிற்சிக் கழகந் தோன்றியதில், இஃதொன்றே முதலாவதாகும். ஆதலால் இதில் சேர்ந்து கற்க விருப்பமும், ஊக்கமுமுள்ள துறவினரும் மற்றையோரும், அடியிற்காணும் விலாசத்திற்குத் தங்கள் விலாசங்களுடன், கடிதமெழுதி விரைவில்வந்து கற்கலா மென்பதைத் தெரிவிக்கின்றனர்.

திருவொற்றியூரான்.

கடிதம் எழுதும் விலாசம்:—
உயர்திரு T. P. இராமசாமிபிள்ளை யவர்கள்
2. N. தியாகர் விலாசம், ஜனரல் காலின்ஸ்ரோட்
வேப்பேரி, போஸ்டு சென்னை.

***

மாளவியாவிற்குத்தடை :— ஹைதராபாத்துக்குச் செல்லவிருந்த பண்டித மதன்மோகன் மாளவியாவுக்கு. அவர் அவ்விடம்வரவும் அங்குப் பிரசங்கங்கள் செய்யவும் அனுமதியில்லை எனறு நிஜாம் கவர்ண்மெண்டார் தடுத்துவிட்டனர்.

***

ஸைமன் கமிஷன்:—சென்ற வெள்ளிக்கிழமை ஸைமன் கமிஷன் அங்கத்தினர் லண்டனில் போய்ச் சேர்ந்தார்கள் அச்சமயம் லண்டனிலுள்ள இந்தியர்கள் பகிஷ்கார ஆரவாரம் செய்தார்கள் ஊர்வலம் வந்தபோது போலீஸ்க்காரர்கள் தடைசெய்து அவர்கள் கொண்டுசென்ற கொடிகளைப் பிடுங்கி ஒடித்துச் சிலரைத் தாக்கிக்கொண்டுபோய் அப்புறப் படுத்தினதாகவும் தெரியவருகிறது. இது சம்பந்தமாய் நாலுபேர் கைது செய்யப்பட்டனர்.

Rt Hon. கேணல் ஜார்ச் பிரடெரிக் ஸ்டான்லி என்பவர் சென்னை ராஜதானியின் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

***

சென்ற 28உ பம்பாயில், ஹிந்துக்கள் ஊர்வலம் வந்தவொரு சந்தர்ப்பத்தில் மகமதியர்களுக்கும் அவர்களுக்கும் சச்சரவு உண்டாகி; ஹிந்துக்களில் இருவரும் மகமதியரில் இருவரும் இறந்ததோடு இருதிறத்திலும் 17 பேர்கள் காயமடைந்ததாகவுந் தெரியவருகின்றது.

***

இங்கிலாந்துப் பொதுத்தேர்தலில் கான்ஸர்வேடிவ் கட்சியினர் அதிகாரத்திற்குவருவாராயின், மிஸ்டர் வின்ஸன் சர்ச்சில், இந்தியா மந்திரியாகக்கூடுமென்றும், ஸர் ஆஸ்டின் சாம்பர்லென், அந்நியாட்டு மந்திரியாக இருந்தபின், நமது வைஸராயாயிருக்கும் லார்ட் இர்வினுக்கு அப்பதவி கிடைக்கலாமென்றும் சிலர் கருதுகின்றனர்.

***

தென்னிந்திய புகை யிரதப்பாதை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட 18 பேர்மேல் இதுகாறும் திருச்சினைப்பள்ளியில் விசாரணை நடந்துவந்த வழக்கு முடிவாகி, 18 பேரில் 15-பேர் 10-வருஷக் கடுங்காவலுக்குத் தீர்ப்பளிக்கப்பட்டனர். இப்பதினைந்துபேரில் மூவர் முகுந்தலால் சர்கார், சிங்காரவேலுச்செட்டியார் கிருஷ்ணசாமிப்பிள்ளை ஆகிய இவர்கள்.

***

பார்லிமெண்டு தேர்தலில் ஸர் ஜான் சைமனுக்கு எதிரான அபேக்ஷகராக இங்கிலாந்தில் கம்மியூனிஸ்ட் கட்சியார் மீரத்துவழக்கில் குற்றவாளியாய்ச் சம்பந்தப்பட்டிருக்கும் ஒஸ்மானி என்பவரை நியமித்து அவருக்காக வேலைசெய்யத் தீர்மானம் பண்ணியிருக்கிறார். இதைப்பற்றி அக்கட்சியார் காங்கிரஸ் தலைவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறார்கள்.

***

டாக்டர் இரவீந்திரநாத் டாகூர், அமெரிக்காவுக்குச் சென்றபொழுது, எமிக்ரேஷன் ஆபீஸர் அவரைக் கப்பலிற்கண்டு, "உமக்கு எழுதப்படிக்கத் தெரியுமோ; இங்குக் கரையிறங்கினல் எம் தேயத்திற்கு நீர் வீண்பாரமாயிருப்பீரோ" என்பனபோன்ற கேள்விகளை முறைப்படிகேட்டு அவமதித்தனரென்றும், அதற்கு டாகூர் அவரைத் தடித்துப்பேசி அவர் தேயத்தில் இறங்குவதில்லையென்று மறுத்து நேராக ஜப்பானுக்குப் பயணப்பட்டனரென்றும் வதந்திகள் வந்துகொண்டிருந்தன. டாக்டர் டாகூர், தடித்துப் பேசினரென்பது முன்னரே மறுக்கப்பட்டது. இப்பொழுது, டாக்டர் டாகூர் தன் பயணச்சீட்டை இழந்துவிட்டதால் சிறிது காலதாமதம் ஆனதன்றி வேறொன்றும் நேரவில்லை என்னத் தெரியவருகின்றது. ஆனல் டாக்டர் டாகூர் ஜப்பானிற்குப் பயணமாய்விட்டது மாத்திரம் நிச்சயம்.

***

பம்பாய் நெசவு ஆலைத்தொழிலாளர் வேலை நிறுத்தம்:—பம்பாய் நெசவு ஆலைகளில் 8 ஆலைகளில் தவிர மற்றவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஏறக்குறைய 130000 பேர் வரையில் வெள்ளிக்கிழமை பன்னிரண்டு மணிக்குமேல் வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டார்கள். சகலமும் அமைதியாய் இருக்கிறது. இவர்கள், மே மாதம் முதல் வாரத்துக்குள், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையில் தொழிலாளர் ஒத்துக்கொள்ளக் கூடிய ஏற்பாடு உண்டாகாவிட்டால் அநேகர் தத்தம் ஊர்களுக்குச் செல்லவிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இதன் விலை ரூ. 2.0[illegible] இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஆப்டோன் படங்களுடனும், லயர் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஆரியன் புக் டிபோ, நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

"ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது. மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.
(வெளி நாடுகட்கு 6 மாத சந்தா இல்லை)

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

189053

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)